விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 26 வெள்ளிக்கிழமை (11.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 267

### பெரும்பான்மை காணப்படுவதனால்

## ஜனநாயகத்தை அழித்து குற்றவாளிகளை பாராளுமன்றத்துக்கு அழைத்து வருவதா?



### ஐ.தே.க தலைவர் ரணில் கேள்வி

(கொழும்பு)
அரசாங்கத்துக்கு பெரும்பான்மை காணப்படுவதால் ஜனநாயகத்தை அழித்து மரணதண்டனைக் குற்றவாளிகளை பாராளுமன்றம் அழைத்து வருவதா? என ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கட்சி உறுப்பினர்களை நேற்று சந்தித்து 23

### ஒரே கயிற்றில் தொங்கிய நிலையில்

## ஆண், பெண் இருவர் சடலங்களாக மீட்பு

### கிளிநொச்சியில் சம்பவம்



(மல்லாவி)
கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பரந்தன் ஓவசியர் சந்திப் பகுதியில் 23

## கஞ்சாவுடன் குருநகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினரால் குருநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 500 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒரு 23

## விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் மரணம்

(வவுனியா)
கூரை வேலை செய்த போது ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் 10 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் மட்டக் களப்பு இருதயபுரத்தை சேர்ந்த பாலன் பாலசசி 23

### 20ஆவது திருத்தத்தின் மூலம்

# நீதிமன்ற சுயாதீனத்துக்கு அழுத்தங்கள் ஏற்படலாம்

### ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்



**(கொழும்பு)**

**20ஆவது திருத்தத்தின் சில ஏற்பாடுகள் மூலம் நீதிமன்ற சுயாதீனம், சட்டத்தரணி தொழிலுக்கு அழுத்தம் ஏற்படக்கூடும் என சுட்டிக்காட்டி, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.**

உயர்நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கும்போது, சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றக் குழுவின் கண்காணிப்புடன் மாத்திரம் குறித்த செயற்பாடு மட்டுப்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (மு-3)

*(இது தொடர்பான மற்றொரு செய்தி உள்ளே)*

## நெதர்லாந்து தூதுவருடன் பிரதமர் மகிந்த சந்திப்பு

(கொழும்பு)
பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் தன்ஞா கோன்க்ரீட்ஜ்க்கும் இடையில் சந்திப்பு ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றுள்ளது.

பொதுத் தேர்தல் வெற்றி மற்றும் கொரோனா நோய்ப் பரவல் தடுப்புத் தொடர்பில் அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நெதர்லாந்து தூதுவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அண்மை 23

### இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட

## 43 கிலோ கஞ்சா பளைப் பகுதியில் மீட்பு

### சந்தேகத்தில் இருவர் கைது

(தருமபுரம்)
இந்தியாவிலிருந்து கடல்வழியாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 43 கிலோ கிராம் கஞ்சாவை இலங்கைக் கடற்படையினர் நேற்று 23

புலம்பெயர் தமிழர்கள்
அச்சம் ஏதுமின்றி எம்மோடு இணைந்து பணியாற்றுங்கள்
பிரதமர் மகிந்த அழைப்பு

09ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களின் பூர்வீக நிலமான குருந்தூர்மலையில் காவலரண் அமைக்க நீதிமன்றம் இணக்கம்

### இன முறுகலை ஏற்படுத்தும் மதங்களுடன் தொடர்புடைய கட்டுமாணங்களுக்கு தடை

(முல்லைத்தீவு)
தமிழர்களின் பூர்வீக நிலமான முல்லைத்தீவு குருந்தூர் மலையில் காவலரண் அமைப்பதற்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்று இணக்கம் தெரிவித்துள்ளது.

மேலும் அப் பகுதியில் இன முறுகலை ஏற்படுத்துகின்ற வகையில், மதங்களுடன் தொடர்புடைய கட்டுமாணங்களை மேற்கொள்ளமுடியாதெனவும் மன்று உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

முல்லைத்தீவு - குருந்தூர் மலை தொடர்பாக ஏற்கெனவே இடம்பெற்ற 23

### 20ஆவது திருத்தத்தில்

## மேலும் திருத்தங்கள் இடம்பெறலாம் - உதய கம்மன்பில

(கொழும்பு)
அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தை உருவாக்க நியமிக்கப்பட்ட குழு தேவைப்பட்டால் வரைபில் மேலும் திருத்தங்களை செய்யும் என்று இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் கம்மன் 23

## இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள

# வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள காணிகள் மக்களுக்கு திருப்பி கையளிக்கப்படாது

## இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தினரால் கையக்கப்படுத்தப்பட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலங்கள், தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு திருப்பி கையளிக்கப்படாது.**

**ஏனெனில் இது தேசிய பொருளாதாரத்துடன் நேரடியாக தொடர்புடையவை என்று மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.**

இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் 90 சதவீதம் ஏற்கனவே மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தொல்பொருள் தளம் என்று கூறி விவசாயிகள் பயிரிடுவதைத் தடுப்பதற்கு ஒரு பௌத்த துறவி முயன்றார் என்று பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

பௌத்த பிக்குகள் ஆக்கிரமிப்பாளர்கள் அல்லர். அவர்களும் இந்த சமுதாயத்தின் ஒரு பகுதியாகவே உள்ளனர். அத்துடன் சிங்களப் பாரம்பரியத்தை பாதுகாக்க அவர்களுக்கு அனைத்து உரிமையும் உண்டு.

இராணுவம் வடக்கில் மதிப்புமிக்க நிலங்களை ஆக்கிரமித்து வருவதாக விக்னேஸ்வரன் குற்றம் சுமத்துகிறார். எனினும் இராணுவ ஆக்கிரமிப்பு நிலங்களில் 90 சதவீதம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அவர் கேட்பது பலாலியில் வானூர்தி தரையிறங்கும் பாதை. அந்த பாதையில் மறைந்திருந்த பயங்கரவாதிகளால் இரண்டு வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

எனவே அவை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும். இதன்காரணமாக அவற்றை இராணுவம் மீள ஒப்படைக்காது என்றும் சரத் வீரசேகர குறிப்பிட்டார். (ம-03)

# தேசிய பாடசாலைகள் ஆயிரமாக அதிகரிக்கப்படும்

## ஜனாதிபதி கோட்டாபாய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்து இராஜாங்க அமைச்சர்களுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மக்களுக்கும் சமூக மேம்பாட்டிற்கும் காரணமாக அமையக்கூடிய பல தீர்மானங்களை எடுத்தார்.

நாட்டில் மொத்த தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக அதிகரிப்பது அதில் ஒன்றாகும். தற்போதுள்ள சில தேசிய பாடசாலைகள் பெயரளவிலேயே காணப்படுகின்றது. தேவையான வசதிகள் எதுவும் அவற்றில் இல்லை. அவ்வாறான பாடசாலைகளும் உடனடியாக அபிவிருத்தி செய்யப்படும்.

பாடசாலை கட்டமைப்பின் முன்னேற்றத்திற்காக மாவட்ட கல்வி குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட இராஜாங்க அமைச்சர்கள் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டனர். வலயக் கல்வி காரியாலயங்கள் மற்றும் கோட்டக் கல்வி காரியலயங்களுக்கிடை யில் தொடர்பை பலப்படுத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. ஆசிரியர் இடமாற்றம் மற்றும் மாணவர்களை பாடசாலைகளுக்கு உள்வாங்குதல் தவிர்ந்த பாடசாலை கட்டமைப்பின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமையக்கூடிய அனைத்து செயற்பாடுகளுக்கும் பங்களிக்கக்கூடிய சந்தர்ப்பம் அரசியல்வாதிகளுக்கு உள்ளது. அது பொது நலனை நோக்கமாகக்கொண்டதே தவிர அரசியல் தலையீடு அல்ல எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பாடசாலைகளில் உள்ள அதிபர் பற்றாக்குறையை நிரப்புவதற்காக பதில் அதிபர்களை நியமிப்பது தொடர்பாகவும் நேற்றைய கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. ஆசிரியர் யாப்புக்கமைய ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் பரீட்சைகளை நடத்த வேண்டும். அதிபர்களின் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக அது முறையாக இடம்பெறாமையை குறிப்பிடலாம். பாடசாலைகளில் இருக்கின்ற திறமையான மற்றும் அனுபவம் கொண்ட ஆசிரியர்களை பதில் அதிபர்களாக நியமிப்பதற்கு உள்ள வாய்ப்புக்களை கண்டறிவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்றார் (ம-03)

## உயிரிழந்தவரின் உடல்

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தந்தையின் விருப்பத்துக்கு அமைய அவர் உயிரிழந்த நிலையில் அவரது உடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு ஒப்படைக்கப்பட்டது.

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்தையா சிவானந்தவேல் (வயது-73) என்ற முதியவரின் சடலமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு வழங்க மல்லாகம் நீதிமன்றம் அனுமதியளித்தது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக தான் இறந்த பின்னர் தனது உடலை வழங்குமாறு மனைவி மற்றும் பிள்ளைகளிடம் உயிருடன் இருக்கும் போது விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று காலமானார். அவரது உடல் தெல்லிப்பழை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்ட நிலையில் பலாலி பொலிஸார் ஊடாக மனைவி மற்றும் பிள்ளைகள் தமது விண்ணப்பத்தை முன் வைத்தனர்.

அவர்களது விண்ணப்பத்தை ஆராய்ந்த மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ் ராஜா உயிரிழந்தவரின் உடலை மனைவி மற்றும் பிள்ளை களின் ஒப்புதலுடன் யாழ்ப்பாணப் பல் கலைக் கழகத்துக்கு ஒப்படைக்க அனுமதியளித்தார்.

இறுதிக் கிரியைகளின் பின்னர் தந்தை யின் உடலை ஒப்படைக்க பிள்ளை கள் விரும் பிய போதும் நேரம் போதாமையால் இறுதிக் கிரியைகள் கைவிடப்பட்டது. (ம-03)


## ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளை பொதுச்சபைக் கூட்டம்

| கிளை இல. | தவிசாளர் பெயர் | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | திரு. பொ. கோகிலன் | புளியங்குளம் | புளியங்குளம் பொதுநோக்கு மண்டபம் |
| 02 | திரு. உ. ஜெயந்தபிரகாஷ் | இடதுகரை மு.ஐ.கட்டு | இடதுகரை முத்துஐயன்கட்டு கிளை |
| 03 | செல்வி. அ. மோகனகுமாரி | முத்துவிநாயகபுரம் | முத்துவிநாயகபுரம் கிளை |
| 04 | திரு. கு. கஜந்தன் | கணேசபுரம் | கணேசபுரம் கிளை |
| 05 | திரு. வ. விபுலன் | கூழாமுறிப்பு | கூழாமுறிப்பு கிளை |
| 06 | திரு. க. உதயரூபன் | மன்னாகண்டல் | பொதுநோக்கு மண்டபம், மன்னாகண்டல் |
| 07 | திரு. வி. முகுந்தன் | பேராறு | பேராறு கிளை |
| 08 | திரு. எம். முகமட்ஜிப்ரி | பண்டாரவன்னி | பண்டாரவன்னி கிளை, கற்சிலைமடு |
| 09A | திரு. வ. நிருபாகரன் | தச்சடம்பன் | தச்சடம்பன் கிளை |

மேற்படி கிளைகளின் புதிய நிர்வாக சபைத் தெரிவு 12.09.2020ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரித்துள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தல் கிடைக்கப்பெறாவிடினும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட கிளைகளுக்கு சமுகமளித்து கிளைக் குழுவைத் தெரிவு செய்ய உதவுவதுடன் இக் கூட்டத்திற்குரிய நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கில் ஒரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும். எனவே கிளை பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து தங்களின் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவுக் கிளைகளை பலப்படுத்த புதிய நிர்வாக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு ப.நோ.கூ. சங்கம் (வ-து),**
**ஒட்டுசுட்டான்.**

(C-283)



## வேலைக்கு ஆட்கள் தேவை

**அனுபவமுள்ள பெண் அலுவலக உதவியாளர் தேவை.**

- கல்வித் தகைமை (O/L, A/L).
- கணனி அறிவுள்ளவர் விரும்பத்தக்கது (Ms Office).
- வயது (25-40).
- சாரதி அனுமதிப் பத்திரம் விரும்பத்தக்கது.
- மேலதிக ஆங்கில, சிங்கள அறிவு விரும்பத்தக்கது.

(3853)

**தங்களது விண்ணப்பங்களை இல. 108, பலாலி வீதி எனும் முகவரிக்கு 16.09.2020 க்கு முன் அனுப்பி வைக்கவும்.**



## பெயர் மாற்ற அறிவித்தல்

**சபாரட்ணம் விக்கிரமகுமார் என்ற எனது பெயரை சபாரட்ணம் கஜன் சர்மா என 11.09.2020 முதல் மாற்றிக்கொள்கிறேன் என்பதுடன் இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் கஜன் சர்மா என்னும் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகிறேன்.**

**இங்ஙனம்**
**ச. கஜன்சர்மா**

(3854)

# யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரம் ஏக்கர் காணி முப்படை மற்றும் பொலிஸாரின் கைவசம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் தனியார் காணிகள் முப்படையினர் வசமிருப்பதாக யாழ்.மாவட்ட செயலக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.**

சுமார் 3027.85 ஏக்கர் தனியார் காணிகள் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரிடம் காணப்படுவதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 23850.72 ஏக்கர் தனியார் காணிகள் பாதுகாப்புத் தரப்பினரால் கையகப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு வரையில் 16775.50 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு 7075.22 ஏக்கராகக் காணப்பட்டது.

2019 ஆம் ஆண்டு 4047.37 ஏக்கராகக் குறைவடைந்தது. தற்போது அது 3027.85 ஏக்கராகக் காணப்படுகின்றது. இதன்படி தனியார் காணிகளில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 21.91 ஏக்கரும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் 54.59 ஏக்கரும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 2.37 ஏக்கரும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 32.50 ஏக்கரும் கடற்படையினர் வசமுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு ஏக்கரும் நல்லூரில் 4.85 ஏக்கரும் சண்டிலிப்பாயில் 26.53 ஏக்கரும் சங்கானையில் 23.68 ஏக்கரும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 0.71 ஏக்கரும் தெல்லிப்பழையில் 2480.15 ஏக்கரும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 9.61 ஏக்கரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 70.88 ஏக்கரும் கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் 4.49 ஏக்கரும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 9.39 ஏக்கரும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 285.20 ஏக்கரும் பாதுகாப்பு பிரிவின் கீழ் உள்ளன.

இவற்றில் இலங்கை இராணுவத்திடம் 2054.25 ஏக்கரும் கடற்படையிடம் 274.57 ஏக்கரும் விமானப்படையிடம் 646.50 ஏக்கரும் பொலிஸாரிடம் 52.53 ஏக்கரும் உள்ளன. (5-8)

## கொரோனா குறித்து அச்சம்

# கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை கைது செய்ய முடியவில்லை

### காஞ்சன சபையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொரோனா குறித்த அச்சம் நிலவுவதால் வடக்கு கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கைது செய்ய முடியாமல் உள்ளதாக கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான 9 ஒழுங்குவிதிகள், மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் 10 கட்டளைகள் என்பன மீதான விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடக்கில் இருந்த கடற்படைகள் நியூ டயமன் கப்பல் மீட்பு பணிகளில் ஈடுபட்ட காரணத்தினால் சில நெருக்கடிகள் இருந்தன.



எனினும் பாதுகாப்பு கூட்டத்தில் இந்த விடயங்களை மீண்டும் நாம் வலியுறுத்துகின்றோம். அதுமட்டுமல்ல கொவிட் - 19 நெருக்கடிகள் உள்ள நிலையில் இந்திய மீனவர்களை கைது செய்தால் எங்கு தடுத்து வைப்பது என்ற கேள்வி உள்ளது. எனவே இவற்றை கண்காணிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் வடக்கு கடற்பகுதி அதிக பாதுகாப்பிற்கு உட்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## இலங்கைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் வாழ்த்து

(கொழும்பு)

இலங்கையில் ருபெல்லா மற்றும் தாயிலிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி.தொற்றுவதை முற்றாக இல்லாதொழித்த செயற்பாட்டிற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் ஆதானம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## இலவச பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான 400 வகையான இலவச பாடப் புத்தகங்களை அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவும் திறந்த பெறுகைக் கோரல் முறைமூலம் தெரிவு செய்யப்பட்ட தனியார் அச்சக நிறுவனங்கள் ஊடாகவும் அச்சிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான இலவச பாடப்புத்தக விநியோகத்துக்கு 400 வகையான புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான இலவச பாடப்புத்தகம் தொடர்பில் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை முழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஜ-4)

# எம்.சி.சி.உடன்படிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

### சஜித் கேள்வி



(கொழும்பு)

அமெரிக்காவுடனான எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் அரசாங்கம் தமது நிலைப்பாட்டினை அறிவிக்க வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முழு நாட்டையும் அச்சுறுத்தும் பிரச்சினை காணப்படுகின்றது. தற்போதைய ஆட்சியாளர்கள் எம்.சி.சி.உடன்படிக்கையினை இரத்துச் செய்வதாகத் தேர்தலுக்கு முன்னர் கருத்துக்களைக் கூறிவந்தனர்.

ஆனால் தற்போது அதைப் பற்றி எதனையும் அவர்கள் கூறவில்லை. அமெரிக்காவுடனான எம்.சி.சி.உடன்படிக்கை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று யாருக்கும் தெரியாது.

மக்கள் பெற்றுக்கொடுத்த வெற்றியினூடாகத் தற்போதைய அரசாங்கத்தினர் அமெரிக்காவுடனான எம்.சி.சி.உடன்படிக்கையினை இரத்துச் செய்வார்களா இல்லை என்ற கேள்வி எழுந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## சுற்றிவளைப்பில் 420 பேர் கைது

(கொழும்பு)

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 420 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்றுக் காலை 6 மணிவரையான காலப்பகுதிக்குள் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)

# இலங்கையில் ஒரு இலட்சம் பேர் காணாமலாக்கப்பட்டுள்ளனர்

## நீதி வேண்டும் என்கிறார் கனடா எம்.பி

(கொழும்பு)

**இலங்கையில் 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னரான கடந்த 40 வருடங்களில் சுமார் ஒரு இலட்சம் பேர் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என கனடாவின் கொன்சர்வேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் (Garnett Genuis) கார்னெட் ஜீனியஸ் தகவல் வெளியிட்டார்.**

இலங்கையில் காணாமலாக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கோரி கனடாவில் தமிழர்களால் முன்னெடுக்கப்படும் நீண்ட நடைபவனிக்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், வலிந்து காணாமலாக்கப்படுதல், கடத்தல் என்பன சர்வதேச உலகம் முழுவதிலும் பல நாடுகளிலும் சமூகங்களிலும் முக்கியமான ஒரு மனித உரிமைப் பிரச்சினையாக உள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்றாக உள்ளது. இது காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இப்போது ஒரு தொகையான மக்கள் மனித உரிமை விவகாரம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் நடவடிக்கை எடுக்குமாறு கனேடிய அரசாங்கத்தைக் கேட்பதற்காகவும் ரொறண்ரோவிலிருந்து ஒட்டாவாவுக்கும் கியூபெக்கிலிருந்து ஒட்டாவாவுக்கும் நடைபயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள்.

இலங்கையிலும் உலக நாடுகளிலும் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என எமது கொன்சர்வேட்டிவ் கட்சி இது வரை கோரிக்கை விடுத்து வந்த நிலையில்,

குறித்த நடைபவனியை மேற்கொண்டுள்ள மக்களுக்கு நான் வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் கொடுக்கப்போகும் மகஜருக்கு கனேடிய அரசாங்கத்திடமிருந்து பதில் கிடைக்கும் என நம்புகின்றேன் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (2-7)

# விலங்கு வேட்டை, காடழிப்பு; முறையிட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

காட்டுத்தீ மற்றும் சட்ட விரோத காடழிப்பு தொடர்பாகவும் வனவிலங்குகள் வேட்டையாடப்படுவது தொடர்பாகவும் முறையிடுவதற்கு வனவிலங்கு மற்றும் பாதுகாப்பு திணைக்களம் புதிய தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

1992 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் 24 மணி நேரமும் மக்கள் உடனடியாக முறையிடலாம் என்று வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி டபிள்யூ.ரி.வி. திசநாயக்கா நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இதன்மூலம் வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதை தடுக்கவும் காட்டுத்தீயை கட்டுக்குள் கொண்டு வரவும் முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-6-10)

# அரசிற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லை

## வெறும் மாயை என்கிறார் மரிக்கார்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதாக மாயை ஒன்றை அரசாங்கம் காட்டிக் கொண்டிருக்கிறது. முட்டுக் கொடுக்கும் நான்கு பேர் அடங்கலாக 148 பேரே அரசாங்கத்துடன் இருக்கின்றனர் என எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளை தொடர்ந்து ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபாநாயகருக்கு என்று மக்களிடையே கௌரவமொன்று இருக்கின்றது. ஆனால் நீங்கள் தற்போது அழுத்தத்துடனேயே இருக்கின்றீர்கள் என்பது எங்களுக்குத் தெரிகின்றது. அழுத்தங்களுக்கு அடிபணியாது, சுயாதீனமான சபாநாயகராக பணிகளைச் செய்யுமாறு நாங்கள் கேட்கின்றோம். நீங்கள் ஆளும் தரப்பிற்கு மாத்திரமல்ல முழு பாராளுமன்றத்திற்கும் சபாநாயகராகவே இருக்கின்றீர்கள்.

அத்துடன் இந்த அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை. மூன்றில் இரண்டு இருப்பதை போன்று மாயை காட்டுகின்றனர்.

அரசாங்கத்திற்கு 58.9 வீதமே வாக்குகள் கிடைத்துள்ளன. எங்கேயும் மூன்றில் இரண்டு கிடைக்கவில்லை. என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# கல்முனை கடற் பகுதியில் மாற்றங்கள் இல்லை மீனவர்கள் தொழிலில் ஈடுபடலாம்

## நாரா நிறுவனம் அறிவிப்பு



(அம்பாறை)

அம்பாறை கல்முனைக் கடற் பிரதேசத்தில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லை என நாரா எனப்படும் நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் சங்கமன் கந்தை கடற் பரப்பில் இருந்து 38 கடல் மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்த எண்ணெய் தாங்கிக் கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தினை அடுத்து கல்முனை கடற் பரப்பில் சந்தேகத்திற்கிடமான எண்ணெய்ப் படிமங்கள் பிரதேச கடற்றொழிலாளர்களினால் அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில், நாரா நிறுவனத்தினால் பெரிய நீலாவணையில் இருந்து ஒலுவில் வரையிலும் அதேபோன்று பொத்துவில், பானமை, திருக்கோவில் ஆகிய கடற் பிரதேசங்களிலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறித்த ஆய்வுப் பணிகள் 32 கடல் மைல் தூரம் வரை மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த கடற் பிரதேசத்தில் இருந்து பிடிக்கப்பட்ட மீன்களை ஆய்வுக்கு உட்படுத்தி அவற்றிலும் எந்தவிதமான மாற்றங்களையும் அவதானிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ள நாரா நிறுவனத்தின் அதிகாரிகள், பிரதேச கடற்றொழிலாளர்கள் வழமைபோன்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் எனவும் தெரிவித்தனர். (ஜ-4)

## இராசிபலன்

11.09.2020
ஆவணி 26, வெள்ளிக்கிழமை
நவமி பின்னிரவு 12.19 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 12.42 மணிவரை
சுபநேரம் 6.03 - 7.33 மணிவரை
இராகுகாலம் 10.33 - 12.03 மணிவரை
சந்திராஷ்டமம்- அனுசம், கேட்டை வளவன்

**மேஷம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சவால்களை சமாளிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், வெளியூர் பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**தனுசு:** குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவகும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவு பெறும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், ஆரோக்கியம் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**கும்பம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு.

**மீனம்:** உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொன்னான நாள், பயணங்களால் பலனுண்டு.

தொடர் பயிற்சியால் உன் மனதை உன்னால் பண்படுத்த முடியும்

# 30 மில்லியன் தேயிலைக்கன்றுகளை பகிர்ந்தளிக்க அரசாங்கம் தீர்மானம்



(கொழும்பு)
தேயிலை உற்பத்தியை ஊக்கப்படுத்த 30மில்லியன் தேயிலைக் கன்றுகளை உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வருடாந்தம் நாட்டில் 300 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

இதனை அதிகரிப்பதற்காக 500 உற்பத்தி தவறணைகள் ஊடாக இலங்கை தேயிலை சபையின் அனுசரணையுடன் இலங்கை பூராகவும் 30 மில்லியன் தேயிலைக்கன்றுகள் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பெருந்தோட்ட தேயிலை உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# மூன்று ரஷ்ய பல்கலைக்கழகங்கள் சர்வதேச பட்டியலிலிருந்து நீக்கம்

(கொழும்பு)
உலகப் பிரசித்திபெற்ற பற்றைஸ்லுமும்ப உள்ளிட்ட ரஷ்யாவின் மூன்று பல்கலைக்கழகங்களை அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு இலங்கையின் மருத்துவ சபை தீர்மானித்துள்ளது.

விரிவாக ஆராய்ந்ததன் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக மருத்துவ சபை சுட்டிக் காட்டியுள்ளது.

சோவியத் குடியரசு இருந்த போது பற்றைஸ்லுமும்ப என்றழைக்கப்பட்ட பல்கலைக்கழகம் தற்போது ரஷ்ய மக்கள் நட்புறவு பல்கலைக்கழகம் (People's Friendship University of Russia) என அழைக்கப்படுகிறது.

இந்த பல்கலைக்கழகத்தைத் தவிர்ந்த பிரோகோவ் ரஷ்ய தேசிய மருத்துவ ஆராய்ச்சிபல்கலைக்கழகம் (Pirogov Russian National Research Medical University) மற்றும் ட்வேர் அரச மருத்துவ பல்கலைக்கழகம் (Tver State Medical University) ஆகியனவும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் குறித்த மூன்று பல்கலைக்கழகத்திலும் புலமைப்பரிசிலை பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் இலங்கை மருத்துவ சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைய பரீட்சைகளில் தோற்ற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# 20 ஆவது திருத்தம் தொடர்பில் சங்கத்தலைவருக்கு சாலிய கடிதம்

(கொழும்பு)
அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டிருக்கும் அரசியலமைப்பின் 20ஆவது திருத்த யோசனையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் சில விடயங்கள் நீதிமன்றத்தினதும் சட்டத்துறையினதும் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது.

எனவே 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய்வதற்காக சட்டத்தரணிகள் சங்கத்தினால் நியமிக்கப்படவுள்ள குழுவினர் நீதித்துறையின் மீது ஏற்படக் கூடிய தாக்கங்கள் பற்றியும் விரிவாக அவதானம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வலியுறுத்தினார்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் 20 ஆவது திருத்தம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்ததிஸ்ஸவிற்கு அனுப்பிய கடிதத்திலே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.(ஐ-4)

# மசகு எண்ணெய் ஆராய்ச்சிகளை மீள ஆரம்பிக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)
மசகு எண்ணெய் ஆராய்ச்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல வருடங்களாக கைவிடப்பட்டிருந்த எண்ணெய், எரிவாயு ஆராய்ச்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் கொள்கையளவிலான தீர்மானமொன்றை எடுத்துள்ளது.

இதற்கமைய இயற்கை வாயு தொடர்பிலான கொள்கை உருவாக்கப்பட்டதாக கடந்த வாரம் அறிவித்ததாகவும் எனினும் இங்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பது அத்தியாவசியமான தேவையாகக் காணப்படுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-6)

# பசுவதைத் தடைச்சட்டம் நிறைவேற்றம்; பிரதமருக்கு சிவசேனை பாராட்டு

(குப்பிழான்)

இலங்கையில் பசுவதைத் தடைச் சட்டத்தை கொண்டு வருவதற்காகப் பிரதமரைப் பாராட்டுவதாக இலங்கை சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், சிவ சேனை அமைப்பின் கோரிக் கையை ஏற்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பசுவதைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்துள் ளார். இவ்விடயம் நாட்டின் சைவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான விடயமாகும். இலங்கையில் வாழ்கின்ற 30 லட்சம் சைவப் பெருமக்கள் அனைவரும் நன்றியைப் பிரதமருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பசுவதைத் தடைச் சட்டத் தைக் கொண்டு வருவது போல மதமாற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் கண்காணி த்து மதமாற்றத்தைக் குறைக் கவும், மதமாற்றத் தடைச் சட்ட த்தை கொண்டு வரவும் பிரத மர் மகிந்த ராஜபக்ஷ முயற்சிப் பார்.

அவ்வாறு செய்தால் இலங் கையில் வாழ்கின்ற 30 இலட் சம் சைவத்தமிழ் மக்களும் அவரது முயற்சிக்கு ஆதரவு கொடுப்பர் எனவும் அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (5-4-30)

## திருவிழாத் திருப்பலி

(குருநகர்)

குருநகர் கொலைவிலக்கி மாதா ஆலயத்திருவிழா நேற்று 10 ஆம் திகதி வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நாளை மறு தினம் 12 ஆம் திகதி சனிக்கி ழமை காலை 6 மணிக்கு திருவிழா திருப்பலியும் திருச் சொரூப ஆசீர்வாதமும் இடம் பெறும். (5-4-106)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயப் பொதுக்கூட் டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத் தில் தலைவர் ச.சிறீதரன் தலை மையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் பிரதம விருந் தினராக தெல்லிப்பழை பிர தேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ கலந்து கொள்வார். (5)

# வடமாகாண ஆளுநர் விடுத்த விசேட உத்தரவு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதிகளில் கனரக வாகனங்கள் பாவனையைக் கட்டுப்படுத்த சமிக்ஞை பலகை களைப் பொருத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் உத்தரவு பிறப்பித்துள் ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதிகளில் கனரக வாகனங்கள் பயணிப்பதால் வீதிகள் சேதமடைகின்றன என்று சபைகளின் தலைவர் கள் சுட்டிகாட்டியதையடுத்து அவர் இந்த உத்தரவினை பிறப் பித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூரா ட்சி மன்றங்களின் தலைவர் கள், செயலாளர்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஆளு நர் இவ் விடயத்தினைத் தெரி வித்தார்.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதிக ளில் கனரகப் பாவனையைத் தடுக்க அவற்றின் பயணத்துக்கு தடை என்று சமிக்ஞை பலகை களை நாட்ட வேண்டும்.

அதற்கு முன்னதாக வீதிக ளின் தரத்துக்கு ஏற்ப பயணிக்க முடியாத வாகனங்களின் வகை களைக் கண்டறியப்பட வேண் டும் எனத் தெரிவித்துள்ள அவர் சமிக்ஞை பலகைகளை நடுவ தன் ஊடாகவே கனரக வாகன ங்கள் உள்ளூராட்சிசபை வீதிக ளில் பயணிப்பதை போக்குவ



ரத்துப் பொலிஸாரால் கட்டுப்படு த்த நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித் தார். (5-8)

# இந்தியத் தூதுவரை சந்தித்தார் அங்கஜன்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது யாழ்.மாவட் டத்தின் உட்கட்டமைப்பு அபி விருத்தி, விவசாயம், வீட்டு வசதி, குடிதண்ணீர் மற்றும்



சுகாதாரம், சுற்றுலாப் பயணம் மற்றும் இந்திய முதலீடுக ளைக் கொண்டு வருதல் உள் ளிட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட் டன. (5-8)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

விதையனைத்தும் விருட் சமே" செயற்றிட்டத்தினால் நாளை 12 ஆம் திகதி சனிக்கி ழமை காலை 8 மணி முதல் இளவாலை பிரதேச வைத்தி யசாலை அருகிலுள்ள வெள்ள வாய்க்கால் வீதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள் ளது. எனவே சமூக ஆர்வலர் கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களை இச் சிரமதா னப் பணியில் கலந்து கொள் ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட் டுக்கொண்டுள்ளனர். (5)

# ஜாஎல மீன் உணவு உற்பத்தி தொழிற்சாலையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் மீன்களுக் கான உணவு உற்பத்தி தொழிற்சாலையாக நிர்மாணிக் கப்பட்ட எக்ரிஸ்டார் பிஷ் மீல்ஸ் தனியார் நிறுவனத்தின் உற் பத்திகளை நாளொன்றுக்கான சராசரி 1500 கிலோ வரை அதிகரிப்பது தொடர்பான கலந் துரையாடல் கடந்த திங்கட்கி ழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலை மையில் நடைபெற்றது.

மாளிகாவத்தையில் அமை ந்துள்ள அமைச்சு அலுவலகத் தில் இடம்பெற்ற குறித்த கலந் துரையாடலில் மீன் உணவு உற்பத்திகளை அதிகரிப்பதில் காணப்படும் சவால்கள் தொடர் பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

எக்ரி ஸ்டார் பிஷ் மீல்ஸ் தனியார் நிறுவனமானது தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் (நாரா) ஆலோ சனையுடன் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நிறுவ னமானது இலங்கையில் மீன்க ளுக்கான உணவு உற்பத்தி யில் ஈடுபடும் முதலாவது நிறு வனமாகும்.

தற்போது இங்கு மீன்களுக் கான உணவு உற்பத்தி செய் யப்பட்டாலும் இயந்திரங்களின் வினைத்திறனற்ற செயற்பாடு கள் காரணமாக உற்பத்தியை முழுவீச்சுடன் மேற்கொள்ள முடி யாத நிலையேற்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை அமைக் கப்பட்ட போது விசேடமாக தரு விக்கப்பட்ட இயந்திரங்கள் தற் போது உலகில் பாவனையி லுள்ள அதி நவீன தொழில் நுட்பம் கொண்ட இயந்திரங் களுக்கு இணையானவை அல்ல என்பதன் காரணமா கவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

நாரா நிறுவனத்தின் பொறி யியலாளர்களும் எக்ரி ஸ்டார் பிஷ் மீல்ஸ் தனியார் நிறுவன த்தின் பொறியியலாளர்களும் இவ்வியந்திரங்களை நவீன மயப் படுத்துவதற்கு பாரிய முயற்சிகள் மேற்கொண்டனர். இருப்பினும் இத்தொழிற் சாலையின் மூலம் தற்போது நாளாந்தம் குறிப்பிட்ட அளவி லான மீன் உணவுகளையே உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

ஆகவே பொருத்தமான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களை பெற் றுத் தருமாறு இத்தொழிற்சா லையின் உரிமையாளர்களால் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவிடம் இதன்போது வேண்டு கோள் விடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்துப் பொருட்களையும் இலங்கையி லேயே உற்பத்தி செய்யும் கொள்கையின் அடிப்படையில் நாட்டுக்கு தேவையான மீன் உணவு அனைத்தையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய் வதே அரசாங்கத்தின் நோக்க மெனத் தெரிவித்த அமைச்சர், எதிர்வரும் 14 ஆம் திகதி குறி த்த தொழிற்சாலைக்கு நேரடி யாக விஜயம் செய்து தீர்க்கமான மற்றும் சாதகமான முடிவொ ன்றை மேற்கொள்வதாக உறு தியளித்தார். (4-5)

# சகல அபிவிருத்தித் திட்டங்கள் அனுமதியுடன் நடைமுறைப்படுத்த வேண்டும்

## பிரதேச சபைத் தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் பிரதேசசபையின் அனுமதி இன்றி தன்னிச்சை யாக மேற்கொள்ளப்படும் அபி விருத்தித் திட்டங்களை எதிர் வரும் காலங்களில் அனுமதி க்க மாட்டோம் என சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் திட்டவட்டமா கத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட அமர்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கட ந்த காலங்களில் பல்வேறு திணைக்களங்கள் பிரதேச சபையை மீறி தம் எண்ணத் தில் வீதி அபிவிருத்தித் திட் டங்களை மேற்கொண்டிருந்த னர். அதனைத் தொடர்ந்தும் செய்ய அனுமதிக்க மாட்டோம்.

பிரதேசசபை எல்லைக்குள் சபையின் ஆலோசனை மற் றும் அனுமதியுடன் அபிவிருத் திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எமது அதிகாரங் களை வேறு ஒருவரிடம் ஒப்ப டைக்க முடியாது.

கடந்த காலங்களில் பல விடயங்கள் எமது கையை மீறி இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. எதிர்காலத்தில் இவ் விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவோம் என தெரிவித்திருந்தார். (5-4-30)

# நகர்ப்பகுதி ஊடாக செல்லும் டிப்பர்களால் மக்கள் விசனம்

(கரணவாய்)

மணல் ஏற்றிச் செல்லும் டிப்பர் வாகனங்கள் தொடர் அணிகளாக தினமும் பகல் வேளையில் நெல்லியடி நகர்ப் பகுதி ஊடாக செல்வதால் விபத் துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப் பங்கள் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கிறார் கள்.

தற்பொழுது பாடசாலை கள் ஆரம்பித்துள்ளமையால் நகர்ப்பகுதியில் சனநெரிசல் அதிகமாக காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் கர வெட்டி பிரதேச சபை தவிசா ளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது இவ்விடயம் உரிய அதிகாரிகளின் கவனத் திற்கு கொண்டு செல்லப்பட்ட தாகவும் ஒரு வாரத்தினுள் இதற்குரிய தீர்வை உறுதி செய்ய முடியுமெனவும் தெரி வித்துள்ளார். (5-8-4-60)

# 20 ஆவது திருத்தச் சட்டம் ஜனாதிபதியை பாதுகாப்பதற்கானதல்ல

## ஜீ.எல்.பீரிஸ்



(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் முன் மொழியப்பட்ட ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்ற விதி நீதிமன்ற வழக்குகளில் இருந்து ஜனாதிபதியைப் பாதுகாப்பதற்காக கொண்டுவரப்படவில்லை என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

இந்த அதிகாரம் பொது மக்களுக்குத் தடையற்ற சேவையை வழங்க ஜனாதிபதிக்கு உதவும் என்றும் 19 ஆவது திருத்தம் இருக்கும் வரை, ஜனாதிபதி நீதிமன்றங்களுக்கு பதில் வழங்க வேண்டியவராக இருப்பதனால் பொதுமக்களுக்கு சேவை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முன்மொழியப்பட்ட 20 ஆவது திருத்தத்தின் பிரிவு 35 (1) இந்த படி. 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஜனாதிபதிக்கு எதிராக எந்தவொரு விடயத்திற்காகவும் எந்தவொரு தரப்பினரும் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# ஆயுதங்களுடன் மூவர் கைது

(கொழும்பு)

திக்வெல்ல, போதரகந்த பகுதியில் ஒரு தொகை ஆயுதங்களுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

திக்வெல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேக நபர்களிடம் இருந்து போரா 12 வகை துப்பாக்கி ஒன்று, டி கடஸ் வகை துப்பாக்கி ஒன்று, கல்கடஸ் வகை துப்பாக்கி ஒன்று. போரா 12 வகை துப்பாக்கிகளுக்கான தோட்டாக்கள் 27, சட்டவிரோத கத்தி மற்றும் வாள் ஒன்று கைப்பற்றப்பட்டது. (ஐ-4)

# மாடுகளை வெட்டுவது தொடர்பில் ஆலோசனைகளைப் பெற நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரதும் ஆலோசனைகளைப பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு ஒரு மாதத் துக்கு ஒத்தி வைத்துள்ளதாகவும் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப் படும்என்றும் இந்த விடயம் தொடர்பான முதற்கட்ட யோசனையே தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ஐ-6)


**சேவை**

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை AAA Gold Center

(C-1010)

0765684346



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 21 ¾ செவ் 2 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்: வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11183

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 97 செவ் 1 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்: Assistant Manager
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்
தொ.இ: B/11184

பிறப்பு: 1981 கிறிஸ்தவம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. தச்சுவேலை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் மணமகன் விவாகரத்தானவர் கணவனை இழந்தவர் அல்லது விவாகரத்தானவர் ஏற்கப்படும்
தொ.இ: B/11185

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 30 ¼ செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: தகுந்த உயர் உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11188

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 55 செவ் 9 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்
தொ.இ: G/9098

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 47 செவ் 9 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகத்தர் அல்லது வெளிநாட்டவர்
தொ.இ: G/9102

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: செவ் 10 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/9116

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: செவ் 7 இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்:பட்டதாரி தனியார் நிறுவனத்தில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்
தொ.இ: G/9128

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 13 கோவில் வீதியில் ஆதன இலக்கம் **111B** என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது தியோ மைக்கல் என்ற பெயரிலே ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இளையதம்பி கோபாலசிங்கம் முகதாவில் 1972.08.07 ஆம் திகதியிடப்பட்ட 147ம் இலக்க உறுதி ஊடாக தியோ மைக்கல் சொலமன் நில.பர 5 குளி 6 விஸ்தீரணமான ஆதனத்தில் நிந்தப்படுத்தப்பட்ட நில.பர 2 குளி 6 இன் சொரியலான அரைவாசி மைக்கல் சுவாம்பிள்ளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

எனினும் குறித்த 147ம் இலக்க உறுதியில் சொரியலான அரைப்பங்கிற்கு தாயுறுதிகள் எதுவும் குறிப்பிடப்படாது வெறுமனே பெற்றோர் வழிவந்த ஆதனமென குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை மைக்கல் சுவாம்பிள்ளை யாருக்கும் எழுதிக்கொடுக்காமல் இறக்க அவரின் சகோதரி வெளிச்சோர் அந்தோனிமுத்து கைம்பெண் யோசப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு இ.ஜெயசிங்கம் முகதாவில் 1998.08.25 ஆம் திகதியிட்ட 1881 இலக்க உறுதி மூலம் றிச்சோட் பாலேந்திரா வின்சன் பெண் பற்றிமா ராஜினிக்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

மேற்குறித்த ஆதனத்தை 2264 இலக்க 1999.12.18 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சி.ஜெயசிங்கம் முகதாவில் நிறைவேறிய உறுதி மூலம் றிச்சோட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமா ராஜினியும் சின்னப்பு நாயகம் கௌரி நாயகத்திற்கு நிபந்தனை அறுதி மூலம் வழங்கப்படுகிறது.

சின்னப்பு நாயகம் சௌந்தரநாயகமும் பெண் அர்ச்சனா செல்வரஞ்சிதமும் பிரசித்த நொத்தாரிசு சி.ஜெயசிங்கம் முகதாவில் 2001.12.04 ஆம் திகதியிட்ட 2657ம் இலக்க அறுதி உறுதி மூலம் மீளவும் றிச்சோட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமா ராஜினிக்கும் அறுதியாக விற்பனை செய்துள்ளார்.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.ஜெயசிங்கம் முகதாவில் 2001.12.04 ஆம் திகதியிட்ட நிபந்தனை அறுதி உறுதி மூலம் றிச்சோட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமா ராஜினியும் மாணிக்கம் குமாரசாமியும் பெண் ஜெயராணிக்கும் அறுதி விற்பனை செய்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட மாணிக்கம் குமாரசாமியும் பெண் ஜெயராணியும் மீளவும் 14.10.2003 ஆம் திகதியிடப்பட்ட 3760 இலக்க அறுதி உறுதி மூலம் றிச்சோட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமாவுக்கும் அறுதியாக விற்பனை செய்துள்ளனர்.

பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 2005.09.11 ஆம் திகதியிட்ட 1032ம் இலக்க உறுதி மூலம் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி றக்கா வீதி இல.40 றிச்சோட் பாலேந்திரா வின்சனும் பெண் பற்றிமா ராஜினியும் எஸ்தாக்கி டியூக் கருணாகரன் பெண் நீற்றா குமுதினி கருணாகரன் ஆகியோர்களுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

குறித்த எஸ்தாக்கி டியூக் கருணாகரன் பெண் நீற்றா குமுதினி கருணாகரன் தமது விசேட அதிகாரத்தத்துவப்பத்திரம் மூலம் எஸ்தாக்கி கிளமோற் குலெந்திரனுக்கு தனது பெயரில் மாநகர சபையில் ஆதனவரிப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்ள அதிகாரம் வழங்கியுள்ளனர்.

ஆதன டாப்பு: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "புது வளவு" உத்தரவு பெற்ற அளவையாளர் ஏ.லாறன்ஸ் 25.08.1972 ஆம் திகதியில் அளந்து வரைந்த 3760ம் இலக்கப்படத்தின் படி நில.பர.2 குளி 7. இதில் வடக்குப்பக்கமாக அரைவாசி நில.பர.1 என்று குளி (3.5) மூன்று தசம் ஐந்தும் கிணறும் அதற்குரியவைகளும் அதன் எல்லைகள்.

**கிழக்கு:- கோவில் வீதி**
**வடக்கு:- இதன் மிகுதி ஆதனம்**
**மேற்கு:- வின்சன்ற் கைம்பெண் திரேசம்மாவின் ஆதனம்**
**தெற்கு:- வின்சன் பெண் ஸ்ரெலா சரோஜினியின் ஆதனம் இதடங்கலும்**

தற்போது எஸ்தாக்கி டியூக் கருணாகரன் பெண் நீற்றா குமுதினி தனது தத்துவக்காரர் ஊடாக இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது எஸ்தாக்கி டியூக் கருணாகரன் பெண் நீற்றா குமுதினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர்**
**யாழ்ப்பாணம் மாநகரசபை.**

(C-276)

# சட்டவிரோத மணல் அகழ்வு

## மூவர் உழவு இயந்திரத்துடன் கைது



(வவுனியா)

மாங்குளம் - பனிக்கன் குளம் கனகராயன் ஆற்றுப்பகுதியில் இருந்து சட்டவிரோத மணல் கடத்தல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் உழவு இயந்திரங்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பனிக்கன்குளம் பகுதியில் உள்ள கனகராயன் ஆற்று பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணல் கொண்டு சென்றவர்களை நேற்று முன்தினம் இரவு மூன்று உழவு இயந்திரங்களுடன் மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வனவள பாதுகாப்புத்திணைக்கள உத்தியோகத்தர்களுடன், மாங்குளம் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் போதே மணல் ஏற்றிச்சென்ற சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களையும் சான்றுப் பொருட்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4-299)

# வீதி விதிகளை மீறிய 28 பேர் மாட்டினர்

(நெளுக்குளம்)

வவுனியா குருமன்காடு பகுதியில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது போக்குவரத்து வீதி விதிமுறைகளை பின்பற்றத்தவறிய 28 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் போக்குவரத்து பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாதலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மான வடுவின் ஆலோசனைக்கு அமைவாக நேற்று மாலை குருமன்காடு சந்தியில் போக்குவரத்து பொலிஸார் வீதி விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 28 பேருக்கு எதிராக நடவடிக்கை முன்னெடுத்தனர்.

தலைக்கவசம் இன்றி, கைத்தொலைபேசியில் உரையாடியபடி, காப்புறுதி ஆவணம் இன்றி, மோட்டார் அனுமதிப்பத்திரம் இன்றி, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை எனப் பல்வேறு விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 28 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதில் நான்கு பேருக்கு எதிராக நீதிமன்ற வழக்கு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய 24 பேருக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து நகரில் முன்னெடுக்கப்படும். எனவே பொதுமக்கள்,சாரதிகள் போக்குவரத்துப் பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டனர். (5-4-299)

# முட்டை ரோலில் இருந்த முட்டையில் சந்தேகம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் உணவகமொன்றின் சிற்றுண்டிக்குள் (முட்டை ரோல்)வழமைக்கு மாறாக இருந்த முட்டை நுகர்வோரால் இனங்காணப்பட்டு வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வவுனியாவில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் மாலை தேநீர் அருந்தச் சென்ற வாடிக்கையாளர்களுக்கு சுடச்சுட பரிமாறப்பட்ட சிற்றுண்டிக்குள் இருந்த முட்டை வழமைக்கு மாறாக இருந்துள்ளது.

குறித்த முட்டை இறப்பரினாலான முட்டை போன்ற தோற்றத்தில் இருந்ததுடன் அதன் இயல்பும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தமையை உணர்ந்த வாடிக்கையாளர்கள் வவுனியா நகர சபையின் பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவித்ததை தொடர்ந்து குறித்த சிற்றுண்டிச்சாலைக்கு விரைந்த பரிசோதகர் நீண்ட ஆய்வின் பின்னர் குறித்த சிற்றுண்டிகளைக் கையகப்படுத்தி மேலதிக பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளார்.(5-4-299)

# நினைவு நாளும் நினைவுப்பேருரையும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் இன்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தின் செல்லா மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து கொள்வார். நினைவுப் பேருரையை செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் ஆற்றுவார்.

கொவிட்- 19 நிலைமை காரணமாக இம்முறை நிகழ்வு மிகவும் எளிமையாக முன்னெடுக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (5-4)



கொக்குவில் யாழ்.விஷன் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையில் நேற்று முன்தினம் கிருஷ்ண ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் நல்லூர் தவத்திரு வேலன் சுவாமி கலந்து கொண்டார்.

(படம்:- குப்பிழான் செய்தியாளர்)

# பாதசாரிக்கடவை அமைத்துத் தருமாறு சமுர்த்திப் பயனாளிகள் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக பாதசாரிக்கடவை இன்மையால் தினமும் விபத்துக்கள் இடம்பெறுகின்றன. எனவே இவ் விபத்தை தடுப்பதற்கு சமுர்த்தி வங்கிக்கு முன்பாக பாதசாரிக் கடவை அமைத்துத்தருமாறு சமுர்த்தி பயனாளர்கள் கோருகின்றனர்.

வவுனியா- மன்னார் பிரதான வீதியிலுள்ள சமுர்த்தி வங்கிக்கு கணேசபுரம், கூமாங்குளம், ஈச்சங்குளம், வைரவப்புளியங்குளத்தை உள்ளடக்கிய 16 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள சமுர்த்திப்பயனாளர்கள் தினமும் சுமார் 150 பேர் வந்து செல்கின்றனர்.

பிரதான வீதியைக்கடந்து வங்கிக்குச் செல்ல முற்படும் போது முச்சந்திக்கு வரும் வாகனங்களுடன் மோதிவிபத்துகள் இடம்பெறுகின்றன.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு பயனாளர்களின் நலன் கருதி பாதசாரிக்கடவை ஒன்றினை அமைத்துத்தருமாறு சமுர்த்திக் பயனாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-299)

# சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## அரச அதிபர் ரூபவதி தெரிவிப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயக் குழு கூட்டம்கிளிநொச்சிமாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி இரணைமடு குளத்தின் சம்மேளனத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் இரணைமடு குளத்திலிருந்து விதைப்புக்குரிய ஆரம்ப நீர் வழங்கள் தொடர்பாகவும் கால்நடை வளர்ப்பவர்கள் தொடர்பாகவும் நெல் விதைப்பு எக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் மற்றும் இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கரடியன் ஆற்றுப்படுகை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கும்போது பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்து வருகின்றோம்.

குறிப்பாக இப்பிரதேசங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு வேறு மாவட்டங்களில் இருந்து வருபவர்கள் அல்லது சகோதர மொழி பேசுபவர்கள் இந்த செயலில் ஈடுபடவில்லை. குறிப்பாக எமது மாவட்டத்தில் இருப்பவர்கள் தான் இவ்வாறான செயலில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விடயங்களைக் கவனத்தில் கொண்டு அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்வதற்கு தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

குறித்த விவசாயக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சிமாவட்ட நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள், கமநல சேவைத்திணைக்களத்தின் அதிகாரிகள், மாவட்ட விவசாய உற்பத்தி ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (5-4-100)



கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு மின்னொளி ஊட்டும் ஸ்ரிக்கர்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளி. மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சந்திரசேகர, கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் கமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்:-முறிகண்டி, அக்கராயன் செய்தியாளர்கள்)

# தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக

# ஆறாயிரத்திற்கும் அதிகமானோர் பாதிப்பு





(கொழும்பு)

**நாட்டில் கடந்த ஓரிரு தினங்களாக நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக 13 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முதல் நேற்று முன்தினம் மாலை வரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் 121 மில்லி மீற்றர் என்ற அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதே போன்று கொழும்பு உள்ளிட்ட மேலும் 12 மாவட்டங்களும் கடும் மழை பெய்யக்கூடும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக் களத்தினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



கடந்த நான்கு நாட்களாக நிலவுகின்ற சீரற்ற காலநிலையால் 13 மாவட்டங்களில் 1,715 குடும்பங்களைச் சேர்ந்த 6,732 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு , 17 வீடுகள் முழுமையாகவும் 554 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முதல் பெய்த கடும் மழையால் கொழும்பு மாவட்டத்தின் பல வீதிகளும் நீரில் மூழ்கியிருந்தன. வெல்லம்பிட்டிய, அங்கொட, தெமட்டகொட, ஆமர்வீதி, கொழும்பு பல்கலைக்கழக வளாகம் என்பன வெள்ள நீரில் மூழ்கியிருந்தமையால் நேற்று முன்தினம் காலை குறித்த வீதிகளினூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்திருந்தது. இதேவேளை மேலும் சில தினங்களுக்கு இவ்வாறான மழையுடனான காலநிலை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தினால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடை மழை பெய்யும் என்றும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற மழையுடனான காலநிலைக்கமைய 12 மாவட்டங்களில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புத்தளம், குருநாகல், மாத்தளை, கம்பஹா, கேகாலை, கண்டி, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 150 மில்லி மீற்றரை விட அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 24 மணித்தியாலங்களில் நேற்று முன்தினம் கொழும்பு மற்றும் காலி மாவட்டத்தில் 100 - 121 மில்லி மீற்றர் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலையால் கடந்த 3 நாட்களில் கடும்மழை, காற்று, மின்னல் தாக்கம், மரம் முறிந்து விழுதல், சுவர் இடிந்து விழுதல், மண்சரிவு மற்றும் வெள்ளம் என்பவற்றின் காரணமாக 13 மாவட்டங்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. (ஐ-4)

# குளிரில் நின்று நீங்கள் உழைக்கும் பணத்தை நாங்கள் பாதுகாப்போம்

## புலம்பெயர் தமிழர்களுக்கு பிரதமர் அழைப்பு

(கொழும்பு)

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் மற்றும் மக்கள் அமைப்புக்கள் எந்தவித அச்சமும் இன்றி எம்முடன் இணைந்து பணியாற்ற வாருங்கள் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

நாட்டின் முதலீடுகளை ஊக்குவித்தல் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆட்சிக் காலத்தில் நாட்டில் பல முதலீடுகளை மேற்கொள்ள வருகை தந்த நீங்கள் அனுபவித்த சிரமங்களை நாம் நன்கறிவோம். குறிப்பாக எமது நாட்டில் முதலீடுகளை செய்வதற்கு உள்ளூர் முகவர்கள் தரகுப் பணம் பெற முற்பட்டதால் நீங்கள் பலர் நாட்டில் முதலீடு செய்வதை தவிர்த்து வெளியேறியுள்ளது எமக்கு மிகவும் வேதனை அளிக்கிறது.

அரசு உங்களிற்கான முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும். அத்துடன் உங்களிடம் யாராவது தரகுப் பணம் அல்லது வேறு ஏதாவது தொல்லைகள் கொடுத்தால் நீங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகத்திற்கு நேரடியாக தெரியப்படுத்தலாம்.

குளிர் - பனி என்று பாராமல் உங்களை வருத்தி நீங்கள் உழைக்கும் பணத்தை உங்கள் மண்ணில் நீங்கள்



தைரியத்துடன் முதலீடு செய்வதற்கு எமது அரசு என்றும் உங்களிற்கு பக்க பலமாக செயற்படும் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு



15

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

● உணவுப் பொருட்களுக்கான மொத்த மற்றும் சில்லறை விலைகளை விதித்தல்.

● உயிருள்ள விலங்குகள் விற்கப்படுவதைக் கட்டுப்படுத்தல்.

● இறைச்சியடிக்கப்படும் இடங்களை முகாமை செய்தல்.

● கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பற்றிய விதிகள்.

● விலங்குகளுக்குத் தடுப்பூசி ஏற்றல்.

● ஆதனவரியை அறவிடல்.

● கட்டணங்களையும் அறவீடுகளையும் நிர்ணயித்தல்.

● சிகையலங்கார நிலையங்களுக்கான உரிமங்களை வழங்குதல்.

● தொந்தரவு தரக்கூடிய அல்லது அபாயகரமான கைத்தொழில்கள், தொழில் முயற்சிகளை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்.

● பணம் மாற்றுபவர்களுக்கான உரிமங்களை வழங்குதல்.

● கணக்காளர்களுக்கும் கணக்காய்வாளர்களுக்கும் உரிமங்களை வழங்குதல்.

● பொதுவான பொழுதுபோக்கு நிலையங்களுக்கு உரிமம் வழங்குதல்.

● உணவுப் பொருட்களின் விற்பனை மற்றும் களஞ்சியப்படுத்தலைக் கட்டுப்படுத்தல்.

● உணவு வகைகள், தேநீர், கோப்பி விற்கும் இடங்களுக்கு உரிமம் வழங்குதல்.

**8. நடமாடும் வியாபாரிகள் சம்பந்தமாக**

● உரிமங்களையும் நிபந்தனைகளையும் விதித்தல்.

● பொருட்களை விற்றல் தொடர்பான விதிகளை நிர்ணயித்தல்.

**9. லோன்றி (சலவை) நடவடிக்கைகள் தொடர்பாக**

● லோன்றிகளுக்கான உரிமம் வழங்கல்.

● லோன்றிகளில் மருத்துவ பரிசோதனை நடத்துதல்.

● வெளிச்சம், காற்றோட்டம், வடிகாலமைப்பு தொடர்பான விதிகள்.

● லோன்றி மூலமாக நோய் பரவுவதைத் தடுத்தல்.

● வந்து.போகின்ற லோன்றிப் பொருட்களைப் பரிசீலனை செய்தல்.

**10. பாற் பண்ணைகள் தொடர்பாக**

● பாற் பண்ணைகளுக்கு உரிமம் வழங்குதல்.

● பாற் பசுக்களைப் பரிசோதித்தல்.

● பாற் பசுக்களின் கட்டுப்பாட்டுக்கான விதிகளை விதித்தல்.

● பால் நிலையங்களின் துப்புரவு.

● பால் மூலமாகத் தோன்றக்கூடிய நோய்கள் பற்றிய முன்னெச்சரிக்கை முறைகள்.

● பாலுக்கான தரங்களை விதித்தல்.

● கெட்டியாக்கப்பட்ட, உறைந்த பால், புட்டிப்பால், நெய், பாற்கட்டி போன்றவை தொடர்பான விதிகள்.

● பாற் பண்ணைகளால் தோன்றக்கூடிய நோய்கள் மீதான பரிசீலனை.

● பாற் பண்ணைகள் அல்லாத இடங்களில் பசுக்களுக்கான உரிமங்களை வழங்குதல்.

11. கலால் வரி அறவிடும் நிலையங்களை தாபித்தலும் பேணி வருதலும்.

12. தீயணைக்கும் படையினது உதவியைப் பெற்றுக் கொள்ளல்.

13. அறிவித்தல்களை காட்சிக்கு வைத்தல் தொடர்பாக.

14. நீர் விநியோகம், மின்சாரம் வழங்குதல், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள் ஆகியவற்றுக்கான கட்டணங்களை விதித்தல்.

15. பிற பொதுச் சேவைகளுக்கான கட்டணங்கள்.

16. அழுக்கு நீரில் மீன் பிடிப்பதைத் தடுத்தலும், கரையோர மீன்பிடியை எளிதாக்குதலும்.

17.ஒலிபெருக்கிக் கருவிகளைக் கட்டுப்படுத்துதல்.

18.வரி மற்றும் உரிமங்கள் பற்றிய அறிக்கைத் தகவல்களை வழங்குதல்.

19.கைத்தொழில் கழிவுப் பொருட்களைக் கட்டுப்படுத்தல்.

20.உரிம விநியோகத்தை ஒழுங்குமுறைப்படுத்தல்.

21.வாகனங்கள் தரிக்கப்படுவதை முகாமை செய்தல்.

விசேடமாக உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் முறையான சேவை ஒன்றினை முன்னெடுக்க தேவையான சேவை கட்டணம், கட்டுப்பாடு மற்றும் அனுமதிக்கும் முறைமை ஆகியவற்றின் மூலம் பெறக்கூடிய வருமானத்தினை (சட்டத்தின் மூலம் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ள) ஏற்படுத்தல் மற்றும் அவற்றினை சேகரிப்பது தொடர்பாகவும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலையான சொத்துக்களைப் பாதுகாத்தல், பராமரித்தல், நிர்வகித்தல் மற்றும் அவற்றின் மூலம், வருமானத்தினை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக, வெளிவாரியான திட்டங்கள் தொடர்பாக, தேவையான உபவிதிகள் உட்பட ஏனைய சட்டதிட்ட உருவாக்கம் போன்றவையும் இதில் உள்ளடங்கும்.

இத் தகவல்கள் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் வெளியிடப்பட்ட "உள்ளூராட்சி சட்டங்கள்" என்னும் நூலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

**குறிப்பு:-** அனைத்து விடயங்களுக்கும் உபவிதிகளை உருவாக்குதல் இயலாது. உதாரணம்: அரசாங்க நிதி, விவகாரம் மற்றும் அரசியலமைப்பு தொடர்பாக இயற்ற முடியாது.

**உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உபவிதிகளை உருவாக்குவதில் உள்ள பிரச்சினை**

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தேவைப்படுகின்ற சட்ட ஆலோசனைகளினை இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடிய முறையான நிறுவனம் ஒன்று இல்லை. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தற்போது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சட்ட ஒத்துழைப்பு இலவசமாக வழங்கப்படுவதில்லை. உள்ளூராட்சி அமைச்சு மற்றும் திணைக்களம் என்பன உள்ளூராட்சி நிறுவனம் தொடர்பாக உபவிதிகள் செயற்படுத்தலினை சரியான முறையில் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. இக் குறைப்பாடுகளை இல்லாமல் செய்ய இந்நிறுவனங்களின் பங்களிப்பு மிக அவசியமாகும். இது தொடர்பாக முழு இலங்கைக்கும் பொருந்தக் கூடிய சட்டத்துறை ஒன்று தேவைப்படுகிறது.

> **உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தேவைப்படுகின்ற சட்ட ஆலோசனைகளினை இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடிய முறையான நிறுவனம் ஒன்று இல்லாமை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உபவிதிகளை உருவாக்குவதில் உள்ள பிரச்சினையாகும்.**

**உள்ளூராட்சி சபைகளின் நிதி பற்றிய சட்டம் எத்தகையது?**

பொதுமக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளால் ஆக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கடமைகளும் பணிப்பொறுப்புகளுமாவன:

"சட்டத்தினால் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் ஒரு நிர்வாக எல்லைக்குள்ளான பிரதேசமொன்றில் வாழ்கின்ற மற்றும் அப்பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்துள்ள பொதுமக்கள் தொடர்பாக அவ்வதிகாரப் பிரதேசத்தின் பொதுப் பாதைகள், பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைக்குரிய சேவை நிர்வாகம் மற்றும் நிர்வாகம் என்பவற்றினூடாக அச்செயற்பாடுகளை பாதுகாத்து மற்றும் விருத்தி செய்து பொதுமக்களது நல்வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்களை உருவாக்கி பேணிப்பாதுகாப்பதற்காக நிறுவனத்திடமுள்ள வளங்களை வினைத்திறனான விதத்தில் பயன்படுத்துவதும் வழிநடத்துவதும் இவ்வதிகாரப் பிரதேசத்தினது உள்ளூராட்சி மன்றத்தின் கடமையும் பணிப் பொறுப்புமாகும்."

> **பொது மக்களது நல்வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்களை உருவாக்கி பேணிப் பாதுகாப்பதற்காக நிறுவனத்திடமுள்ள வளங்களை வினைத்திறனான விதத்தில் பயன்படுத்துவதும் வழிநடாத்துவதும் இவ்வதிகாரப் பிரதேசத்தினது உள்ளூராட்சி மன்றத்தின் கடமையும் பணிப் பொறுப்புமாகும்**

மேற்படி கடமைகள் பற்றி அவ்வவ்வுள்ளூராட்சி மன்ற முதன்மைக் கட்டளைச் சட்டங்களின் பின்வரும் பிரிவுகளில் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் - பிரிவு 4; நகர சபைகள் கட்டளைச் சட்டம் - பிரிவு 4; பிரதேச சபைகள் சட்டம் - பிரிவு 3; மேற்படி பொறுப்பு மற்றும் தமக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றும் போது தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் சமூக மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளைப் போலவே பொது வசதிகளையும் மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு உள்ளூராட்சி மன்றமொன்று நிதி வலிமையை கொண்டிருக்க வேண்டும். அந்நிதி வலிமையை உறுதி செய்து கொள்வதற்காக அவ்வவ்வுள்ளூராட்சி மன்ற முதன்மைச் சட்டங்கள் மற்றும் பிற சட்டங்களின் கீழ் மிக இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் தொடர்பான விடயங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைகளினால் வரி மற்றும் குத்தகை பாராளுமன்றம் அங்கீகரித்த சட்டத்தின் கீழ் மாத்திரமே விதிக்கப்படுதல் வேண்டும் (அர. அமை. உறு. 148).

**அரசியல் அமைப்பு உறுப்புரை-148** "பாராளுமன்றமானது பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாடு உடையதாயிருத்தல் வேண்டும். பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றின் அல்லது அப்போதுள்ள ஏதேனும் சட்டத்தின் அதிகாரத்தினால் அல்லது அதன் கீழ்த் ஏதேனும் உள்ளூரதிகார சபை யினால் அல்லது வேறு ஏதேனும் பகிரங்க அதிகார சபையினால் வரி, வீதவரி அல்லது வேறு ஏதேனும் அறவீடு எதுவும் விதிக்கப்படலாகாது."

**உள்ளூராட்சி சபைகளின் காணி மற்றும் ஆதன நிர்வாகம்**

மூன்று வகையான உள்ளூராட்சி மன்றங்களுக்குமான காணி மற்றும் ஆதன நிர்வாகம் சம்பந்தமான அதிகாரங்கள் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 5, 36, 37 இலும் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 3, 34 இலும் பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 16, 17, 18 இலும் கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) சபைக்கு ஒப்படைக்கப்படும் ஆதனங்கள்.

● தரிசு நிலங்களும் திறந்த வெளிகளும்.

● கருங்கல், கபொக்கல், கிரவல் கிடங்குகள்.

● பொது தடாகங்களும் ஓடைகளும்.

● பொதுவான குளங்களும் தடாகங்களும் கால்வாய்களும்.

● கட்டடமுள்ள அல்லது கட்டடமற்ற அரசாங்கக் காணிகள்.

(ஆ) சுவீகரிப்பின் மூலமாக ஒப்படைக்கப்படும் ஆதனங்கள்.

● பொதுப் பூங்கா, தோட்டங்கள் மற்றும் திறந்த வெளி நிலங்கள்.

● பொது வீதிகள், பாதைகள், கால்வாய், பாலம் அவற்றுடன் தொடர்புடைய காணிகளும் நிர்மாணிப்புகளும்.

(தொடரும்)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022

## ஐந்தில் ராகு வருகிறது... ஆதரவுக்கரம் தருகிறது!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**மகர இராசி வாசகர்களே!**

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு, செப்டெம்பர் முதலாம் திகதி முதல் பாக்கிய ஸ்தானம் எனப்படும் 5ஆம் இடத்தில் இருக்கிறார். அதேபோல உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் அதே நாளில் லாப ஸ்தானத்திற்கு வரப்போகின்றார்.

இதற்கிடையில் நவம்பர் 15ஆம் திகதி, உங்கள் இராசியான மகர இராசிக்கே குரு பகவான் செல்கின்றார். அதன்பிறகு செப்டெம்பர் 26 ஆம் திகதி உங்கள் இராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகி வருகின்றார். ஏழரைச்சனியில் இப்பொழுது ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறப்போகின்றது. 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி குரு, கும்ப இராசிக்குச் செல்கின்றார். அப்போது அவர் உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களைப் பார்வையிடுகின்றார்.

இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டும் உங்கள் சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்களின் பலமறிந்தும் செயற்படுவதன் மூலம் வெற்றிக்கனியை எட்டிப்பிடிக்கலாம். கிரகங்களின் சஞ்சாரம் பலம் இழந்திருக்கும் பொழுது பரிகாரங்களும், வழிபாடுகளும் ஓரளவு கைகொடுக்கும்.



**சொத்துக்களால் லாபம் தரும் ராகு**

**சொந்தங்களால் பலன் தரும் கேது**

ராகு பகவான் இப்பொழுது சஞ்சரிக்கும் இடம் 5ஆம் இடமாகும். இந்த இடம் பூர்வ புண்ணிய ஸ்தானம் மட்டுமல்ல, பிள்ளைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள வைக்கும் இடமாகும். எனவே அங்கு ராகு வரும்பொழுது பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். 'கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு நல்ல பொருத்தமான வேலை அமையும். முன்னோர் செய்த திருப்பணிகளை விடாது செய்ய முன்வருவீர்கள்.

பதினொராம் இடத்திற்கு வரும் கேதுவால் இலாப ஸ்தானம் பலமடைகின்றது. எனவே தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். மூத்த சகோதரர்களால் முன்னேற்றம் உண்டு. மூதாதையர் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். வெளிநாட்டில் இருந்து நீங்கள் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். பழுதடைந்த வீட்டைப் பராமரிக்கும் பணி துரிதமாக நடைபெறும். தொழிலில் வரும் லாபத்தைக் கொண்டு அறப்பணிகள் செய்ய முன் வருவீர்கள். ஒரு சிலருக்கு கௌரவப் பதவிகள் கிடைக்கலாம்.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 04.01.2021 வரை)

மிருகசீரிடம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கட்டடம் கட்டும் முயற்சியில் இருந்த தாமதங்கள் அகலும். ஆரோக்கியம் சீராகி அன்றாடப் பணிகளைத் திறம்படச் செய்து முடிப்பீர்கள். தாயின் உடல்நலம் தேறும். சகோதரர்கள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பர். தனியார் துறையில் பணிபுரிபவர்கள் அரசு வேலைக்கு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வரும்.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (05.01.2021 முதல் 12.09.2021 வரை)

சந்திரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, கல்யாணம் போன்ற சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்பு உண்டு. புதிய கூட்டாளிகள் வந்திணைவர். உறவினர்கள் பகை மறந்து பாசத்தோடு பழகுவர். ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாக முடியும். தொழிலை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன்மூலம் வருமானம் வரலாம். இளைய சகோதரத்தோடு இருந்த மனக்கசப்புகள் மாறும். கடல் தாண்டி வசிக்கும் உறவினர்கள் நீங்கள் கேட்ட உதவியைச் செய்து கொடுக்க முன்வருவர்.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.09.2021 முதல் 20.03.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த கவனம் தேவை. விரயங்கள் அதிகரிக்கும். 'நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கின்றதே' என்று கவலைப்படுவீர்கள். அஷ்டமாதிபதியாகச் சூரியன் விளங்குவதால் கூட்டாளிகளால் ஏமாற்றங்கள் ஏற்படலாம். குடும்பச் சுமை கூடும். மற்றவர்களின் ஒத்துழைப்பு குறைவாகக் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை சிலருக்கு உருவாகும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள், கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம்.

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் முதலில் புதன் சாரத்திலும், பிறகு சனி சாரத்திலும், அதன்பின்பு குரு சாரத்திலும் சஞ்சரிக்கப் போகின்றார். 'நிழல் கிரகம்' என்று வர்ணிக்கப்படும் கேது பகவான், இந்த காலகட்டத்தில் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வாரா என்று பார்ப்போம். பாதசார அடிப்படையில் பார்க்கும் பொழுது, பகை கிரகத்தின் சாரமாகவே இருக்குமேயானால் அதற்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் செய்துகொண்டால் ஓரளவேனும் நற்பலன்களைப்பெற முடியும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 09.05.2021 வரை)

கேட்டை நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும்பொழுது வரவும், செலவும் சமமாகவே இருக்கும். வருங்கால நலன் கருதி புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். முன்கோபத்தின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளையும் இழக்க நேரிடலாம். பழைய கடனில் ஒரு பகுதியைக் கொடுக்கும் வாய்ப்பு உருவாகும். தந்தை வழி உறவில் நெருக்கம் அதிகரிக்கும். அவர்களால் தொழிலுக்கான மூலதனம் அல்லது




ஒத்துழைப்பு கிடைக்கலாம். கூட்டாளிகளோடு இருந்த மனக்கசப்புகள் மாறும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள்.

### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.05.2021 முதல் 16.01.2022 வரை)

உங்கள் இராசிக்கு இராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். எனவே அவரது சாரத்தில் கேது வரும் பொழுது எதிர்ப்புகளை சமாளிக்கும் ஆற்றல் வந்து சேரும். பணவரவு ஏற்ற இறக்கமாக இருந்தாலும் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வேலை கிடைக்கும் என்றாலும், அதில் திருப்தி இருக்காது. அதிகாரிகளின் ஆதரவோடு ஒரு சில பணிகளைச் செய்து முடிப்பீர்கள். தொழிலில் புதிய முதலீடுகள் செய்வதை தவிர்ப்பது நல்லது. ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.



### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.01.2022 முதல் 20.03.2022 வரை)

குரு பகவான், உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். எனவே அவர் சாரத்தில் கேது வரும் பொழுது, விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. சகோதர ஒற்றுமை குறையும். 'தற்காலிகப் பணி நிரந்தரமாகவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். சேமிப்புகள் கொஞ்சம் கரையலாம். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வீண்பழிகள் வராமல் பார்த்துக்கொள்வது நல்லது. வீடுமாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை வரலாம். இக்காலத்தில் தைரியமும், தன்னம்பிக்கையும் உங்களுக்குத் தேவை.

### வளர்ச்சி தரும் வழிபாடு

ஐந்தாமிடத்திற்கு வரும் ராகுவால் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையவும், 11ஆம் இடத்து கேதுவால் பண வரவு திருப்தி தரவும் விஸ்வரூப ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. இல்லத்து பூஜையறையில் லலிதா நவரத்தின மாலை பதிகம் பாடி தினமும் வழிபடுவது குடும்ப முன்னேற்றத்திற்கு நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக உற்றார், உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. சொத்துக்களை உங்கள் பெயரில் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். கற்பக விநாயகர் வழிபாடு கவலைகளைப் போக்கும். பஞ்சமி திதியன்று வராஹியை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# பாரதம்

## அமெரிக்க விண்கலத்திற்கு இந்திய விண்வெளி வீராங்கனையின் பெயர்



(சென்னை)

விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பொருட்களைக் கொண்டு செல்லும் வர்த்தக ரீதியான கார்கோ விண்கலத்துக்கு மறைந்த இந்திய அமெரிக்க விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் பிறந்து படித்து விண்வெளிக்குள் சென்ற முதல் பெண் கல்பனா சாவ்லா என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பங்களை உருவாக்கும் நார்த்ராப் க்ரூம்மான் நிறுவனம் தன்னுடைய அடுத்த விண்கலத்துக்கு எஸ்.எஸ்.கல்பனா சாவ்லா என்று பெயர் சூட்டியுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி கொலம்பியாவில் கல்பனா சாவ்லா உட்பட 7 விண்வெளி வீரர்கள் பயணித்த விண்கலம் வானில் வெடித்துச் சிதறியதன் நினைவாக இந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவின் நார்த்ராப் க்ரூம்மான் நிறுவனம் டுவிட்டரில் பதிவிட்ட கருத்தில் "நாசாவுக்குச் சென்ற இந்தியாவின் முதல் பெண் விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவுக்கு இன்று நாங்கள் மரியாதை செலுத்த இருக்கிறோம். மனிதர்களை சுமந்து செல்லும் விண்கலத்துக்கு கல்பனா சாவ்லா அளித்த பங்களிப்பு நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்கும்.

எங்களின் அடுத்த என்ஜி-14 சைக்னஸ் விண்கலத்துக்கு கல்பனா சாவ்லாவின் பெயரை சூட்டுவதில் நார்த்ராப் க்ரூம்மேன் நிறுவனம் பெருமைகொள்கிறது. மனிதர்களை சுமந்து செல்லும் விண்கலத்துக்கு முக்கியமான பங்களிப்புகளைச் செய்தவர்களுக்கு மரியாதை அளிப்பது எங்கள் நிறுவனத்தின் பாரம்பரிய வழக்கம்.

இந்தியாவில் பிறந்து வளர்ந்து முதன் முதலாக விண்வெளிக்குச் சென்ற கல்பனா சாவ்லா வரலாற்றில் இடம் பிடித்தவர் என்பதால் அவரின் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

முதல் விண்வெளிப்பயணத்தை முடித்த கல்பனா சாவ்லா, 2 ஆவது பயணத்துக்கு தயாரானார். பின்னர், 2003 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி விண்வெளி ஆராய்ச்சிக்காக, அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் -107 (STS-107) அனுப்பிவைக்கப்பட்டது.

இந்திய வம்சாவளி பெண்ணாகிய கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 பேர் அதில் பயணித்தனர். 16 நாட்கள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியபோது டெக்ஸாஸ் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது. இதில் கல்பனா சாவ்லா உட்பட ஏழு விண்வெளி வீரர்களும் பலியானது குறிப்பிடத்தக்கது. (2)

# பாதுகாப்பை உறுதி மக்கள் பயன்பாட்டிற்கு

(ஜெனிவா)

**குறைந்தபட்ச செயற்திறன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யாத எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியும் மிகப்பெரிய அளவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படாது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

கொரோனா வைரஸிற்கான தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ரஷ்யா, சீனா, அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற உலகின் பல்வேறு நாடுகள் ஈடுபட்டு வருகின்றன.

இதற்கிடையில், இங்கிலாந்து நாட்டின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், இங்கிலாந்து அரசு மற்றும் அஸ்ட்ரா ஜெனேகா மருந்து நிறுவனத்துடன் இணைந்து தயாரித்த கொரோனாத் தடுப்பூசி பக்கவிளைவுகளை ஏற்படுத்தியதால் பரிசோதனை பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியின் பரிசோதனைகளை இங்கிலாந்து, அமெரிக்கா, பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் தற்காலிகமாக நிறுத்தியுள்ளன. இதனால் கொரோனாத் தடுப்பூசியை உருவாக்குவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் ரஷ்யாவின் 'ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இறுதிக்கட்ட பரிசோதனை நேற்று ஆரம்பமாகியது. இந்த இறுதிக்கட்டப் பரிசோதனையில் 31 ஆயிரம் பேருக்கு இந்தத் தடுப்பூசி செலுத்தி சோதனை செய்யப்படவுள்ளது.

பல நாடுகள் பல்வேறு கொரோனாத் தடுப்பூசிகளை உருவாக்கி வரும் நிலையில் அதன் பாதுகாப்பு குறித்த

## சமாதானத்திற்கான நோபல் பரிசு; ட்ரம்பின் பெயர் பரிந்துரை



(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தமைக்காக டொனால்ட் ட்ரம்ப் 2021 சமாதானத்துக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பெயரை நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ்டியன் டைப்ரிங்-கெஜெட் முன்வைத்துள்ளார்.

ஏனைய சமாதான நோபல் பரிசு வேட்பாளர்களை விட ட்ரம்ப், நாடுகளுக்கிடையே சமாதானத்தை உருவாக்க அதிக முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவரை பாராட்டுவதாகவும் கிறிஸ்டியன் டைப்ரிங்-கெஜெட் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையிலான உறவை இயல்பாக்கும் ஒரு மத்திய கிழக்கு ஒப்பந்தத்தில் செப்டெம்பர் 15 ஆம் திகதி ட்ரம்ப் கையெழுத்திடுவார் என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## கூடாரத்திற்குள் கற்கும் ஈரானிய



(டெஹ்ரான்)

கொவிட்-19 தொற்று நோயால் மூடப்பட்ட ஈரானியப் பாடசாலைகள் ஏழு மாதங்களின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு வகுப்பறைக்குள் சிறு பிளாஸ்ரிக் கூடாரங்களுக்குள் இருந்தவாறு மாணவர்கள் கல்வி கற்றுவரும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகி பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

தொற்று நோய்க்கு மத்தியில் ஈரானியப் பாடசாலைகள் என்ற தலைப்பிட்டு பத்திரிகையாளர் ஃபர்னாஸ் பாஸிஹி தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள இந்தப் புகைப்படத்தை ஆயிரக் கணக்கானவர்கள் பகிர்ந்துள்ளனர்.

ஈரானில் ஏழு மாதங்களின் பின்னர் கடந்த 5 ஆம் திகதி பாடசாலைகள்

## கறுப்பின தொழில் முனைவோர் திட்டம்; ஆரம்பித்து வைத்தார் ட்ரூடோ



(ரொறண்டோ)

கனடாவில் முதல் கறுப்பின தொழில் முனைவோர் திட்டத்தை பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதற்காக 8 கனேடிய நிதி நிறுவனங்களுடன் கூட்டிணைந்து 221 மில்லியன் டொலர்கள் வரையான வர்த்தக முதலீடுகள் தொடர்பான அறிவிப்பையும் பிரதமர் வெளியிட்டார்.

கனடாவின் முதல் கறுப்பின தொழில் முனைவோர் திட்டத்தை தொடங்குவதற்காக அடுத்த நான்கு ஆண்டுகளில் கனடா மத்திய அரசாங்கத்திடமிருந்து கிட்டத்தட்ட 93 மில்லியன் டொலர்கள் பங்களிப்புச் செய்யப்படும் என பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கூறினார்.

கறுப்பின வணிக உரிமையாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் நாட்டின் வளர்ச்சிக்கு விலைமதிப்பற்ற பங்களிப்புக்களை வழங்குகிறார்கள். அவர்களின் வெற்றி கனடாவின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்கால செழிப்புக்கு அவசியம் என கனேடியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (2)

## சூடானில் வெள்ளப்பெருக்கு அவசர நிலை பிரகடனம்

(கார்டூம்)

சூடானில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்குக் காரணமாகப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அங்கு மூன்று மாதகால அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று சூடானில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம் காரணமாகப் பழைமை வாய்ந்த பிரமிட்டுகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சூடானில் நைல்நதி கரையோரம் சுமார் 2,300 ஆண்டுகள் பழைமையான பிரமிட் காணப்படுகின்றது.

அப்பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக நைல் நதியின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் நதிக் கரையோரம் அமைந்துள்ள பிரமிட்டைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வருகின்றது. இதனிடையே, வெள்ளம் காரணமாக நாடளாவிய ரீதியில் இதுவரை 100 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர். (2)

# வெளிநாடு

# தி செய்யாத தடுப்பூசி
# து கொண்டுவரப்படாது

## உலக சுகாதார அமைப்பு




அச்சம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறைந்தபட்ச பாதுகாப்பை உறுதி செய்யாத எந்த ஒரு கொரோனாத் தடுப்பூசியும் மிகப் பெரிய அளவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படாது என உலக சுகாதார அமைப்பின் முதன்மை ஆராய்ச்சியாளர் சௌமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸிற்கான தடுப்பூசிகள் மனித சமூகத்திற்கு என்னென்ன செய்துள்ளன என்பதை ஒருங்கிணைத்து பார்க்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு, உலக நாடுகளின் அரசுகள், உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றிற்கு நம்பிக்கை அளிக்காத எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியும் மிகப்பெரிய அளவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியின் அளவுகோள் மற்றும் தடுப்பூசியின் திறனை ஆராய தாங்கள் மிகவும் விரிவான மற்றும் முழுமையான செயன்முறையைக் கொண்டுள்ளதாகவும் இந்த அளவுகோள்களை பூர்த்தி செய்யும் தடுப்பூசிகளையே தாம் பரிந்துரை செய்வோம் என்றும் உலக சுகாதார அமைப்பின் முதன்மை ஆராய்ச்சியாளர் சௌமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். (2)

## ள் இருந்து கல்வி
## னியச் சிறார்கள்



திறக்கப்பட்டு சுமார் 15 மில்லியன் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

கல்வி மற்றும் ஆரோக்கியத்திற்கு சமமான முக்கியத்துவத்துவம் வழங்கப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே தொற்று நோய்க்கு மத்தியிலும் சுகாதார-பாதுகாப்பு வழிகாட்டல்களுடன் பாடசாலைகளைத் திறக்கத் தான் முடிவெடுத்ததாக ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரூஹானி தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடான ஈரானில் இதுவரை 3 இலட்சத்து 93 ஆயிரத்துக் கும் அதிகமான கொரோனாத் தொற்று நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர். 22 ஆயிரத்து 669 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## இணையவழி கல்வி கற்க வசதி இல்லை; குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் அவலம்



(ராய்ச்சூர்)

ராய்ச்சூர் பகுதிகளில் இணையவழிக் கல்வி கற்க முடியாத பள்ளி மாணவ-மாணவிகளை அவர்களது பெற்றோர்கள் செங்கல்சூளை, கூலி வேலைக்கு அனுப்பி வைத்து வருகிறார்கள். இதனால் அந்த மாணவ-மாணவிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

கொரோனாவால் பலரது வாழ்க்கை தடம்புரண்டு விட்டது. அதுபோல்கிராமப்புற மாணவர்களுக்கு கல்வியை எட்டாக் கனியாக ஆக்கிய சம்பவமும் தற்போது அரங்கேறி வருகிறது.

கொரோனாவால் பள்ளிகள் திறக்கப்படாமல் உள்ளது. இதனால் இணையம் மூலம் மாணவ-மாணவிகளுக்கு கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஆன்டிராய்டு செல்போன்கள், இணையத்தள வசதி இல்லாமல் ஒன்-லைன் கல்வி சாத்தியமில்லாதது. இதனால் கிராமப்புற மாணவ-மாணவிகள் கல்வி கற்க முடியாமல் அவதிப்பட்டு வருகிறார்கள்.

கிராமப்புற மாணவர்கள், இணையவழியில் பாடம் கற்றுக்கொள்ள தேவையான வசதிகள் இல்லாமல் இருந்து வருகிறார்கள். இதை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட சில பெற்றோர்கள், தங்களது குழந்தைகளைகூலிவேலைக்கு அனுப்பிவரும் சம்பவங்கள் ராய்ச்சூர் மாவட்டத்தில் அதிகரித்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகி வருகிறது. (2)

## கடவுளின் அன்பால் கொரோனா தோற்கடிக்கப்படும்

### வத்திக்கானில் போப்



(ரோம்)

கொரோனாத் தொற்று அச்சத்திற்கு மத்தியில் பாப்பரசர் பிரான்சிஸ் தனது முகக் கவசங்களை நீக்கிய பின் நேற்று முன்தினம் வழிபாட்டாளர்களைத் தொட்டு, சாதாரணமாக உரையாடியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்று இன்னமும் முழுமையாக கட்டுப்படுத்தப்படாத நிலையில், பல நாடுகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இந்நிலையில், 83 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் சாதாரணமாக தமது கடமைகளுக்குத் திரும்பியுள்ளதுடன் முகக் கவசங்களை நீக்கி பின் வழிபாட்டாளர்களைத் தொட்டு, ஆசீர்வதித்தார்.

அத்துடன் வத்திகானில் இதுவரை பொதுப் பார்வையாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

வழிபாட்டின் போது தனது பிரசங்கத்தில் "கடவுளின் அன்பால் கொரோனா வைரஸ் தோற்கடிக்கப்படும்" என்று பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## கொடைக்கானலுக்கு படையெடுத்த சுற்றுலாப் பயணிகள்



(கொடைக்கானல்)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, 'மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால் கடந்த 5 மாதங்களாக கொடைக்கானலில் உள்ள பல்வேறு சுற்றுலா இடங்கள் மூடப்பட்டு வெறிச்சோடின. இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் கொடைக்கானலுக்கு சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்டனர்.

கொடைக்கானலில் கொட்டிக்கிடக்கும் இயற்கை அழகை ரசிக்க முடியாமல் தவித்த சுற்றுலா பயணிகளுக்கு இது வரப்பிரசாதமாக அமைந்தது. இதனால்முதல்நாளான நேற்று முன்தினம் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கொடைக்கானலுக்கு படையெடுத்தனர். (2)

# 5 ஆயிரம் குளங்கள்

# உடனடியாக புனர்நிர்மாணம்

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

**புராதன தொழில்நுட்பம் மற்றும் நவீன விஞ்ஞானப் பொறிமுறைகளின் ஊடாக நாடு பூராகவும் 5 ஆயிரம் குளங்களை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.**



அத்துடன் நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டுள்ள வயல்கள் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கர்கள் நிலப்பரப்பில் "தேசிய உணவு உற்பத்தி பங்களிப்பு வேலைத்திட்டம்" நடைமுறைப்படுத்தப்படும். குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் செயற்றிட்டத்தை துரிதப்படுத்துவதற்காக சிவில் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் சுட்டிக் காட்டினார்.

கிராமிய வயல்கள் சார்ந்த குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இதற்கு முன்னரும் குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது நிபுணர்களினதும் மக்களினதும் பலத்த விமர்சனத்திற்குள்ளாகியது.

குளங்களைத்தோண்டி ஆழப்படுத்தினாலும் நீரைத்தேக்கி வைக்கக் கூடிய புராதன தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான ரீதியான முறைகள் பயன்படுத்தாமையே இதற்கான காரணமாகும். அவ்வாறான குறைபாடுகளை களைந்து பொதுவான வழிமுறைகளின் மூலம் அந்தந்த பிரதேசங்களுக்கு மற்றும் குளங்களுக்கு உரிய முறைமைகளின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# சத்துருக்கொண்டான் படுகொலை

# நினைவுதினம் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.



படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக சத்துருக்கொண்டான் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியருகே இந்த நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது நினைவுத்தூபியில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி இராணுவத்தினருடன் இணைந்து ஊர்காவல் படையினரால் சத்துருக்கொண்டான், கொக்குவில், பிள்ளையாரடி கிராமங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், அங்கவீனம் அடைந்தவர்கள் எனப் பலர் கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

இதில் 5 கைக் குழந்தைகள், 42 பத்து வயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் உட்பட 184 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலை தொடர்பாக விசாரணைகள் நடைபெற்ற போதும் இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எந்தவித தண்டனைகளும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனம் என்கிற பூதம்!

ஒரு நாள் ஒரு மனிதன் யோகி ஒருத்தரைத் தேடிக் கொண்டு போனான்.

"சாமி நான் உழைத்து உழைத்து மிகவும் களைப்படைந்து விட்டேன். இருந்தாலும் இன்னமும் என்னுடைய வேலைகள் எல்லாம் முடியவில்லை. மீதமிருக்கு எல்லா வேலைகளையும் செய்து முடிக்கின்ற சக்தி எனக்குக் கிடைக்க வேண்டும். அதற்கு நீங்கள் தான் வழி செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

"அந்த சக்தியை உனக்கு நான் கொடுத்து விடுவேன். இருந்தாலும் அது உனக்குப் பெரிய தொந்தரவாக இருக்குமே'' என்றார் யோகி.

"இருந்தாலும் பரவாயில்லை சாமி... அப்படி என்ன பெரிய தொந்தரவு வந்துவிடப் போகின்றது...நீங்கள் எனக்கு அந்த சக்தியைக் கொடுங்கள்..'' என்று கேட்டுக் கொண்டான் இவன். இவனுடைய தொந்தரவு தாங்க முடியவில்லை.

யோகி பார்த்தார்... ''அருகே வா'' என்றார். வந்தான். இவன் காதோடு காதாக ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார். அதை அவன் பாராயணம் செய்து முடித்ததும் ஒரு பெரிய பூதம்; அவன் முன்னால் வந்து நின்றது.

"ஐயா...நான் உங்களுக்காக எல்லா வேலையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்க நாள் பூராகவும் இடை விடாமல் எனக்கு ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி எனக்கு வேலை எதுவும் இல்லாமல் போய்விட்டது என்றால்... உங்களையே முழுங்கிடுவேன்... அவ்வளவு தான்'' என்றது.

அவன் பார்த்தான். வேறு வழி இல்லை.. சரி என்று ஒத்துக் கொண்டான். " சரி... வேலை கொடு'' என்றது பூதம்.

"எனக்கு ஒரு பெரிய மாளிகை வேண்டும்'' என்றான்.

அடுத்த விநாடி அவன் கண் முன்னால் ஒரு பெரிய மாளிகை உருவாகி விட்டது.

''எனக்கு ஒரு பெரிய தோட்டம் வேண்டும்'' என்றான். அதுவும் உருவாகி விட்டது.

''குதிரை வேண்டும்'' என்றான் வந்தது '' யானை வேண்டும் '' என்றான்...வந்தது. அவன் கொடுத்த எல்லா வேலையையும் அடுத்த விநாடியே செய்து முடித்தது பூதம்.

இனிமேல் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. இவன் பார்த்தான். நிபந்தனைப் பிரகாரம் பூதம் நெருங்கி வந்தது இவனை முழுங்குவதற்கு. இவன் எடுத்தான் ஓட்டம். ஓடிப் போய் அந்த யோகியின் காலிலே போய் விழுந்தான் சாமி என்னைக் காப்பாற்றுங்கள் என்று.

யோகி பார்த்தார்... அவனுக்கு அதற்கு ஒரு வழியைச் சொல்லிக் கொடுத்தார். சரி என்று கேட்டுக் கொண்டு அவன் மாளிகைக்குப் போனான். பின்னாலேயே வாயைத் திறந்து கொண்டு பூதமும் போய்க் கொண்டிருக்கின்றது.

அங்கே ஒரு பெரிய இரும்புத் தூண் வேண்டும் என்று பூதத்திடம் கேட்டான். உடனே தூண் வந்தது.

அதை நன்றாக மெருகேற்றி வழவழப்பாக ஆக்கச் சொன்னான்.

அதே மாதிரி ஆக்கிவிட்டது. இப்ப அந்தப் பூதத்திடம் இவன் சொன்னான்... இதோ பாரு... நீ என்ன செய்ய வேண்டும் என்றால்...நான் நிறுத்தச் சொல்கின்ற வரைக்கும் இந்தத் தூணிலே ஏறி இறங்கிக் கொண்டே இரு என்றான்.

பூதம் அப்படியே செய்ய ஆரம்பித்தது.

அதற்குப் பிறகு இவன் வேண்டும் என்கின்ற பொழுது மட்டும் அந்தப் பூதத்தைக் கூப்பிட்டு வேலை வாங்கிக் கொள்வான்.

இது ஒரு கதை. எதற்கு இந்தக் கதை என்றால்... மனிதனுடைய மனமும் சக்திவாய்ந்த அவனுடைய சிந்தனையும் இந்தப் பூதத்திற்கு இணையானது. சரியான வேலை கொடுக்கவில்லை என்றால் அது கெட்ட வழிகளிலே செல்ல அவனைத் தூண்டி விட்டுவிடும். அதனாலே மனம் என்கின்ற பூதத்திற்கு வேலை இல்லாத போதெல்லாம் ஈஸ்வர தியானம் என்கின்ற தூணைப் பற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்கின்றார் சுவாமி சின்மயானந்தா.

ஆனால் நாம் எல்லோரும் ஏதோ ஒரு தூணைப் பற்றிக் கொண்டே இருக்கின்றோம். ஒரு குடும்பஸ்தர் மிகவும் பெருமையாகச் சொன்னார்...

"நான் எப்பொழுதும் சும்மாஇருக்க மாட்டேன் சேர். எந்த நேரமும் என் மனைவி முன்னால் நின்று ஏதாவது பேசிக் கொண்டே தான் இருப்பேன்'' என்றார். " நிறுத்தவே மாட்டீங்களா?'' என்றேன். "மாட்டேன்'' என்றார்.

ஏன் என்று கேட்டேன். "நான் நிறுத்தினால் அவள் பேச ஆரம்பித்து விடுவாளே. அதனால் தான் என்றார்.

# உலக பொருளாதார நெருக்கடியிலும் சாதித்துக் காட்டிய இலங்கை

## தொழில்வாய்ப்புக்களை வழங்கவும் நடவடிக்கை

**(கொழும்பு)**

**முழு உலகமும் கொரோனா வைரஸ் பாதிப்பில் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ள நிலையில் நாட்டில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதியமைச்சின் உற்பத்தி வரி திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியின் காலத்தில் நாட்டு மக்களுக்கு பாரிய நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வரி நிவாரணம் மற்றும் கடன் நிவாரணம் ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிட முடியும். கடன்களுக்கான வட்டி தனி இலக்கமாக வைக்கப்பட்டுள்ளமை விவசாயிகளுக்கும் கைத்தொழில் துறைசார்ந்தவர்களுக்கும் பெரும் பலமாக



அமைந்துள்ளது.

இலட்சக்கணக்கான விவசாயிகளின் தொழில் துறைகளைப் பாதுகாக்கும் வகையில் இன்று சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வரிச் சலுகை மூலம் அரசாங்கத்திற்கு பாதிப்பு ஏற்படுமென கூறுபவர்கள் பொருளாதார முகாமைத்துவம் பற்றி அறியாதவர்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாட்டில் யுத்தம் இல்லாத நிலையில் வெளிநாட்டு கையிருப்பு பெரும் வீழ்ச்சி நிலையையே கண்டது.

அதேவேளை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. பங்குச் சந்தையும் மிக மோசமான வீழ்ச்சியை சந்தித்தது. அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக அனைத்துத் துறைகளும் பெரும் வீழ்ச்சியடைந்தன.

அத்தகையதொரு நிலையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை பொறுப்பேற்றார்.

உலகில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பெரும் பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் இலட்சக்கணக்கானோரின் தொழில் வாய்ப்புகள் இழக்கப்பட்டன.

இத்தகையதொரு சூழ் நிலையிலேயே சிறந்த பொருளாதார முகாமைத்துவத்துடன் எமது அரசாங்கம் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க தீர்மானித்துள்ளது. அத்துடன் கல்வி பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அரசு துறையில் தொழிலாளர்களாக நியமனங்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் தனியார் துறைக்கும் சிறந்த பொதி ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# 20 ஆவது திருத்தம் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த வேண்டும்

## ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர் நஷனல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ள ஏற்பாடுகள் தகவலறியும் உரிமைச்சட்டம், பொதுச்செலவீனங்கள் மீதான கண்காணிப்பு, இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகள், சுயாதீனமான தேர்தல்கள் ஆகிய முக்கியத்துவமுடைய விடயங்களில் பெருமளவிற்குத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்றும் இவை பற்றி முதலில் நாட்டு மக்கள் தெளிவடைவதுடன் இது குறித்த விரிவான கலந்துரையாடலொன்றும் இடம்பெற வேண்டியது அவசியமாகும் என்றும் ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர் நஷனல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அசோக ஓபேசேகர தெரிவித்தார்.

ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர் நஷனல் அமைப்பினால் கொழும்பிலுள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த ஜனநாயகக் கட்டமைப்புக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

எனவே இதுபற்றி மக்கள் தெளிவு பெறுவதுடன் விரிவான பகிரங்க கலந்துரையாடலொன்றும் இடம்பெற வேண்டியது அவசியமானதாக உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# போதைப்பொருள் குற்றவாளிகளுக்காக சட்டத்திருத்தம்

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவது தொடர்பில் சட்டதிருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

மேலும், குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட கைதிகளுக்கு மன்னிப்பளிக்கும் முறைமையொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

விளக்கமறியல் சிறைச்சாலையில் 29 ஆயிரம் கைதிகள் உள்ளதாகவும், அவர்களில் சுமார் 8000 பேர் போதைப் பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# பிரதமர் பதவி விலகமாட்டார்

## கெஹலிய திட்டவட்டம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமது பதவியிலிருந்து விலகுவது தொடர்பில் எவ்வித கலந்துரையாடல்களும் அரசாங்க மட்டத்தில் முன்னெடுக்கப்படவில்லை என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை தமக்கு இரண்டு ஆண்டுகளில் பதவியினை இராஜினாமா செய்யும் எண்ணமில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார் என்றும் மேலும் தாம் ஐந்து வருடங்களுக்கு பாராளுமன்றத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில்



இடைநடுவில் வெளியேறுவதற்கான எவ்வித தேவை இல்லையெனவும் கூறினார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

64

கலாநிதி முருகர் குணசிங்கம்

மேற்படி பதின்மூன்று நாடுகளிலும் சுமார் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மாணவர்கள் தமிழ்க்கல்வி பயின்று வருகின்றனர்.

மேலும் பல ஆயிரக்கணக்கான தமிழ் ஆசிரியர்கள் இலவசமாக அப்பாடசாலைகளில் தமிழ் கல்வியைப் போதித்தும் வருகின்றனர்.

மேற்படி புள்ளி விபரங்களைப் பார்க்கும்பொழுது சுமார் பத்து இலட்சத்திற்கும் மேல் மேற்படி நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்களின் பிள்ளைகளில் சுமார் ஐம்பதினாயிரம் பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்று வருகின்றனர் என்பதும் ஒரு பிரமிக்கத்தக்க எண்ணிக்கை ஆகும்.

மேற்கண்ட தமிழ் மொழிப் பாடசாலைகளின் வளர்ச்சியை தொலைநோக்குள்ள ஈழத்தமிழர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் தியாகமும் ஒருங்கே சேர்ந்த ஒட்டுமொத்த எதிர்காலத்திற்குரிய பாரிய அழியாத முதலீடாகவும் தேசியச் சொத்தாகவும் கருத வேண்டும்.

தமிழ் மொழிக்காக முதலிடப்பட்ட ஈழத்தமிழர்களின் மூலதனம், தமிழர்களின் ஒட்டுமொத்த அடையாளத்தைப் பாதுகாத்து அவர்களின் ஒருமைப்பாட்டையும் தனித்துவத்தையும் பேணிக்காத்து தமிழ்த் தேசியத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப் போடப்பட்ட ஒரு விலைமதிக்க முடியாத அசையாத நிரந்தரமான பொருளாதார அடித்தளமாகவே அதனைப் பார்க்க முடிகின்றது.

ஈழத்தமிழர்கள் தமது பிள்ளைகளுக்கு மேலைத்தேச விஞ்ஞான, தொழில் துறை சார்ந்த கல்வியை வழங்கிக் கொண்டு இருக்கின்றனர்.

அவ்வாறான கல்வித்துறைகளில் இளம் தலைமுறையினர் எவ்வாறு தமது கவனத்தைக் குவித்து வருகின்றார்கள் என்பது பற்றி ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது.

அதன் பொருட்டு அவர்களின் பெற்றோர்கள் சந்தித்த சவால்கள், அர்ப்பணிப்புகள் அளப் பெரியன. மேற்கண்ட நாடுகளில் ஆயிரக்கணக்கான இளம் தலைமுறையினர், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணனித்துறை விற்பன்னர்கள், சட்ட வல்லுநர்கள், கணக்காளர்கள், கலைத்துறை விற்பன்னர்கள், சமூக விஞ்ஞானிகள், கல்விமான்களாகத் தடம் பதித்து உள்ளனர்.

மேற்கொண்டு எத்தனை எத்தனை ஆயிரம் இளம்தலைமுறையினர் அவ்வாறு வரப்போகின்றார்கள்.

அவர்கள் தமது பொருளாதார நிலைமைகளில் எவ்வளவு மூலதனத்தைக் குவிக்கப் போகின்றனர் என்பதை நோக்கும்போது எதிர்வரும் காலங்களில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஒரு செல்வம் மிக்க வலுவான இனமாக சமுதாயமாகப் புகழ் பெறப் போகின்றனர் என்பதை எதிர்பார்க்கக் கூடியதாகவே உள்ளது. அவ்வாறான ஒரு வலுவான சமுதாயம் புலம்பெயர் நாடுகளில் எழுச்சி பெறும்போது அது அவர்களது தாய் நாட்டிற்கு ஒரு பாரிய வெளிநாட்டுச் சக்தியாக அமையக்கூடிய வாய்ப்புக்களைப் பல்வேறு வழிவகைகளில் உருவாக்கியே தீரும்.

இவை தவிர, புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் முதல் தலைமுறையினர்களுள் 80 வீதத்திற்கும் மேலானவர்கள் பல்வேறு தொழிற்றுறைகளில் ஈடுபட்டு அயராது, சுறுசுறுப்புடன் உழைத்துச் செல்வம் ஈட்டி வருகின்றனர் என்பது பற்றி ஆதாரத்துடன் ஏற்கனவே இந்தக் கட்டுரையில் கூறப்பட்டு உள்ளது.

சுமார் கால் நூற்றாண்டுகளில் அவர்கள் தாம் வாழும் நாடுகளில் தமக்கென ஒரு நல்ல பொருளாதார அடித்தளத்தை அமைத்து இருக்கின்றனர்.

அது மென்மேலும் வளர்ச்சிப்பாதையை நோக்கியே சென்று கொண்டு இருக்கும். அதேபோன்று பல்வேறுபட்ட சுயதொழில் வணிகத்துறைகளிலும் ஈழத்தமிழர்கள் பல ஆயிரக்கணக்கில் கால் பதித்து இருக்கின்றார்கள் என்பதனைப் பரவலாக மேற்படி நாடுகளில் தெளிவாகப் பார்க்க முடிகின்றது.



மேற்கண்ட நாடுகள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான மளிகைக் கடைகள், உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், விடுதிகள், உணவுப் பரிமாற்றுச் சேவைகள், வெதுப்பகங்கள், நகைக் கடைகள், துணிக்கடைகள், தையல் நிலையங்கள், பூக்கடைகள், கணனி கடைகள், தொலைபேசிக் கடைகள், காய்கறிக் கடைகள், மீன், இறைச்சிக் கடைகள், புத்தகக் கடைகள், தளபாடக் கடைகள், சிகை அலங்காரம், அழகுசாதனக் கடைகள், துப்புரவு செய்யும் நிறுவனங்கள், கட்டடத் தொழில் நிறுவனங்கள், சிறிய, பெரிய சந்தைக் கடைகள், எரிபொருள் விற்பனை நிலையங்கள், மதுபானக்கடைகள், வீடு, நிலம் விற்பனை நிலையங்கள், சட்டத்தரணிகள் சேவை, தனியார் மருத்துவ நிலையங்கள், மிருக வைத்தியசாலைகள், மருந்தகங்கள், முதியோர் பராமரிப்பு நிலையங்கள், குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள், புத்தக அச்சகங்கள், தனியார் வானொலி, தொலைக்காட்சி சேவை நிலையங்கள், இணையத்தளத் தயாரிப்பு மையங்கள், ஒலி, காணொளி விற்பனை நிலையங்கள், குடிவரவுச் சேவைகள், மொழிபெயர்ப்பு நிலையங்கள், தனியார், தபால் சேவை மையங்கள், தனியார் காப்புறுதி வங்கிகள், தனியார் பணமாற்றுச் சேவைகள், காப்புறுதி நிறுவனங்கள், தனியார் போக்குவரத்து நிறுவனங்கள், வாகன விற்பனை நிலையங்கள், வாகனம் திருத்தும் நிலையங்கள், வாகன உதிரிப்பாக விற்பனை நிலையங்கள், வாகன ஓட்டுநர் பயிற்சி நிலையங்கள், மின்சார, மின்னணுவியல் விற்பனை நிலையங்கள், புகைப்பட, ஒளிப்படச் சேவை நிலையங்கள், போக்குவரத்து பயணச் சீட்டு விற்பனைக் கடைகள், கல்வி நிலையங்கள், இயல், இசை, நாடகக் கல்லூரிகள் போன்ற பல்துறை சார்ந்த வணிக நிறுவனங்கள் நிறுவப்பட்டு வணிகத் துறையிலும் தடம் பதித்து வருகின்றன.

எடுத்துக்காட்டாக கனடாவில் உள்ள ரொறண்ரோவில் மட்டும் சுமார் 1381 பதிவு செய்யப்பட்ட வணிக நிறுவனங்கள் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகிறது.

ஆனால் பதிவு செய்யப்படாமலும் மேற்கண்ட வெளியீட்டில் தங்கள் வணிக விளம்பரங்களைக் கொடுக்காத நிறுவனங்களும் எத்தனை உள்ளன என்பதை அறிய முடியவில்லை.

எவ்வாறாயினும் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ஈழத்தமிழர்கள் வாழும் ரொறண்ரோ நகரத்தில் மட்டும் சுமார் 1381வணிக மையங்கள் இருப்பது மிகவும் பிரமிக்கத்தக்கதாகும்.

இதன் அடிப்படையில் சுமார் பத்து இலட்சத்திற்கும் மேல் ஈழத்தமிழர்கள் வாழும் தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய பதினைந்து நாடுகளில் மேலும் எத்தனை ஆயிரம் வணிக மையங்கள் இயங்கி வருகின்றன என்பதை ஊகிக்க முடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக மேற்கண்ட நாடுகளில் குறிப்பாக மருத்துவம், நிலம், வீடு, விற்பனை முதலீடு, இறக்குமதி, ஏற்றுமதி, தொலைத் தொடர்பு போன்றவற்றில் ஈழத்தமிழர்களில் குறிப்பிட்டு எண்ணக்கூடிய தொகையினர் கோடீஸ்வரர்களாக தம்மை மாற்றிக் கொண்டுள்ளனர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

சுமார் கால் நூற்றாண்டுக்குள் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் தாம் வாழும் நாடுகளில் தமது கல்வி, தொழில், வியாபாரம் போன்ற துறைகளில் குறிப்பிடக் கூடிய அளவிற்கு வளர்ச்சி அடைந்து முன்னேறிச் சென்று கொண்டு இருக்கின்றனர் என்பதனை இதுவரை கலந்துரையாடப்பட்ட செய்திகளின் வழியாக அறிய முடிகின்றது.

அதன் விளைவாக அவர்கள் தாம் வாழும் நாடுகளில் தமது பொருளாதார அடித்தளத்தை மிகவும் திடமாக அமைத்து அதனை மேலும் கட்டி வளர்த்து வருகின்றனர் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

இருந்த போதிலும் கணிசமான ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பல்வேறுபட்ட பொருளாதார நெருக்கடிகளிலும் சீரழிவுகளிலும் சிக்கித் தவிப்பதையும் பரவலாகக் காணக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது.

### நாட்டுப் பற்றும் நாடு கடந்த அரசியலும்

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் பல்வேறு வழிகளில் பரிமாணங்களில் தமது தொடர்புகளையும் உறவுகளையும் அபிவிருத்தி செய்ததன் விளைவாக தாம் வாழும் நாட்டிலும் தமது தாய்நாட்டிலும் மிகவும் நெருக்கமானதொரு சமூக வலைப்பின்னலை அல்லது இணைப்பை வலுவடையச் செய்து உள்ளனர்.

அவைகளுள் மிக முக்கியமானது அரசியல் தொடர்புகளும் பிணைப்பும் ஆகும். இவைகள் எல்லாவற்றையும் விட அதி முக்கியமான நிகழ்வு யாதெனில் தமிழ்த் தேசிய உணர்வும் விடுதலையும் தமிழ் ஈழத்தில் இருந்து தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுதான்.

அதன் விளைவே மேற்படி நிலைமை ஏற்பட்டமைக்கு உண்மையான காரணமாகும்.

19 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்து ஆங்கிலம் படித்த தொழில் வல்லுநர்கள் மலேசியத் தீபகற்பத்திற்குச் சென்று தொழில் புரிந்து வாழத் தொடங்கியமை பற்றி ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் குறிப்பிடத்தக்க படித்த மேல் தட்டு வர்க்க ஈழத்தமிழர்கள் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளுக்குத் தொழில், வணிகத்தின் பொருட்டும் சென்று வாழத் தொடங்கினர்.

மேற்படி இரு வகையான புலம்பெயர் தமிழர்கள் பிரித்தானிய அரசுக்கும் தாம் வாழும் நாடுகளுக்கும் விசுவாசமாக இருந்ததை அவதானிக்க முடிகின்றது.

(தொடரும்)

# மதூஷை விடுவிக்க அதிகாரம் இல்லை

## உயர் நீதிமன்றை நாடுமாறு கோட்டை நீதவான் அறிவுரை

(கொழும்பு)

முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகராக இருந்த தற்போதைய சி.ஐ.டி. பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் ஆகியோரை கொலை செய்ய சதி செய்த விவகாரத்தில், குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலகத் தலைவனாகவும் போதைப்பொருள் கடத்தல் மன்னனாகவும் அறியப்படும் மாகந்துரே மதூஷ் தன்னை விடுவிக்குமாறு முன்வைத்த கோரிக்கையை கோட்டை நீதவான் நீதிமன்றம் நிராகரித்தது.

மாகந்துரே மதூஷ் சட்டத்துக்கு புறம்பாக, சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறி அவர் சார்பில் சட்டத்தரணி ஜாலிய சமரசிங்க முன்வைத்த கோரிக்கை தொடர்பில் நேற்று முன்தினம் தனது தீர்மானத்தை அறிவித்தது.

கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க அக்கோரிக்கையை நிராகரித்தார்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக, மாகந்துரே மதூஷ் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவரது தடுப்புக் காவல் நீடிப்பு உத்தரவானது பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இல்லாத நிலையில் யாரின் கையொப்பத்தில் பெறப்பட்டது என கேள்வி எழுப்பியும், அவர் சட்டவிரோதமாகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி அவரை விடுவிக்க இந்தக் கோரிக்கை கடந்த தவணையின் போது முன்வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் திறந்த மன்றில் தனது உத்தரவை அறிவித்த நீதவான் ரங்க திஸாநாயக்க,

"மாகந்துரே மதூஷ் எனப்படும் மதூஷ் லக்ஷித்த எனும் குறித்த நபரை விடுவிக்க இந்த நீதிமன்றத்துக்கு சட்ட ரீதியிலான அதிகாரம் இல்லை. அவர் சந்தேக நபராக இம்மன்றில் ஆஜர் செய்யப்படவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரின் கைது, தடுப்புக்காவல் தொடர்பில் பிரச்சினை இருப்பின் அது தொடர்பில் உயர் நீதிமன்றினை நாடி தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டிராத போது, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சரின் அதிகாரங்களை பயன்படுத்துவது, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு உட்பட்டதா? இல்லையா? என்பதை தீர்மானி



க்க இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை. பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இல்லாத நிலையில், பெறப்படும் தடுப்புக் காவல் உத்தரவின் சட்டத் தன்மை தொடர்பில் உயர் நீதிமன்றில் மட்டுமே வியாக்கியானத்தை பெற்றுக்கொள்ள முடியும் என நீதவான் ரங்க திஸாநாயக்க தனது உத்தரவில் சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும்உதவிபொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் ஆகியோரை கொலை செய்ய சதி செய்தமை தொடர்பிலான விவகாரத்தில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து, அது தொடர்பில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சி.ஐ.டி.க்கு உத்தரவிட்டார். (ஜ-4)

## ஊடகவியலாளரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்புப் பத்திரிகையான ஐலண்ட் ஆங்கில நாளிதழின் சிரேஷ்ட ஊடகவியலாளர் சக்தி ஜாபர், சடலமாக மீட்கப்பட்டார். சில நாட்களாக காணாமல் போயிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவரது சடலம் வீட்டில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தனியாக வசித்து வந்த ஊடகவியலாளர் சக்தி ஜாபர், கடந்த சில நாட்களாக பணிக்கு செல்லாதிருந்த நிலையில் நேற்று முன்தினம் அவரது வீட்டுக்குச் சென்ற உறவினர் ஒருவர், ஊடகவியலாளர் சக்தி ஜாபர் சடலமாக கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர். இதனடிப்படையில் அவரின் சடலம் மீட்கப்பட்டது. (ஜ-4)

## மத்திய கிழக்கிலிருந்து 664 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கம் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகி இருந்த 664 பேர் நேற்று நாடு திரும்பினர்.

கட்டாரிலிருந்து 81 பேரும் டுபாயில் இருந்து 293 பேரும் சவுதி அரேபியாவிலிருந்து 290 பேரும் நாடு திரும்பினர்.

அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஜ-2)

## சில கோரிக்கைகளை முன்வைத்து கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டம்

(கொழும்பு)

பூஸா சிறைச்சாலையின் சிறப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் சிலர் நேற்று உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தம்மை பார்வையிட வரும் குடும்பத்தினருக்கான கொரோனாப் பரிசோதனைகளை கைவிடவேண்டும் என்றும் தமக்கு சிறைச்சாலை உணவகத்தில் பொருட்களை பெற்றுக்கொள்ள தற்போது அனுமதித்துள்ள 1500 ரூபாவை 5000 ரூபாவாக அனுமதிக்க வேண்டும் என்றும் தங்களின் சட்டத்தரணிகளை அதிரடிப்படையினர் சோதனை செய்யாது உள்ளே வர அனுமதிக்க வேண்டும் மற்றும் சிறைச்சாலையிலுள்ள அதிரடிப்படையினர் மேற்கொள்ளும் சோதனைகளை நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர் என சிறைச்சாலைத் திணைக்கள ஆணையாளரின் பிரத்தியேக செயலாளர் விஜயரட்ன நேற்று தெரிவித்தார். (ஜ-6-10)

## தொற்றாளர்கள் 3147

(கொழும்பு)

புதிதாக 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து நாட்டில் கொரோனா தொற்று எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாறு நேற்று முன்தினம் புதிதாக ஏழு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானமை கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து வந்த கடற்படை அதிகாரி ஒருவர், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பியவர்களில் மேலும் ஒருவர் என இருவருக்கு முன்னரே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் சவுதி அரேபியாவில் இருந்து நாடு திரும்பியவர்களில் மேலும் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 140 இல் இருந்து 3147 ஆக அதிகரித்துள்ளது. (ஜ)


## பழங்கால குகை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பழங்காலக் குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. களுத்துறை, வலல்லாவிட பிரதேச செயலாளர் பகுதிக்குட்பட்ட காட்டிற்கு நடுவில் இந்த குகை கண்டுபிடிக்கப்பட்டதாக தொல்பொருள் ஆணையர் பேராசிரியர் சேனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த இடம் தொல்பொருள் மதிப்புமிக்கதென ஊகிக்க முடிவதாகவும், முதலில் அந்த இடத்தின் ஒரு பகுதியை ஒதுக்கிக் கொள்வது அவசியம் எனவும் தொடர்ந்தும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த இடம் குறித்து மக்கள் கருத்து வெளியிடும் போது, 70 மற்றும் 80 ஆம் ஆண்டுகளில் பல ஆண்டுகளாக இப்பகுதியில் வசித்து வந்த புரம்பி சின்ஜோ



என்ற ஒரு நபர் இந்த குகையில் வசித்து வந்த நிலையில் குகைக்குள்ளேயே உயிரிழந்துள்ளார் என்றும் குகைக்கு அருகில் நீர் உள்ள ஆழமான கிணறு ஒன்று உள்ளதாகவும் தெரிவித்தனர். (2)



## பொதுமக்கள் சந்திப்பு இனி திங்கட்கிழமைகளில்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் பொது மக்கள் சந்திக்கும் தினத்தை திங்கட்கிழமைக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன் போது இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் பொது மக்கள் சந்திப்பு இதற்கு முன்னர் புதன்கிழமைகளில் இடம்பெற்று வந்த நிலையில், எதிர்வரும் நாட்களில் திங்கட்கிழமைகளில் இடம் பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது என்று தெரிவித்தார்.

புதன்கிழமைகளில் பாராளுமன்ற அமர்வுகள், அமைச்சரவைக் கூட்டங்கள் இடம்பெறுவதால் மக்கள் பிரச்சினைகளை மக்கள் பிரதிநிதிகளுக்கு வெளிப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் திங்கட்கிழமையை பொதுமக்கள் தினமாக பிரகடனப்படுத்தினால் இலகுவாக அமையுமென யோசனைகள் முன்மொழியப்பட்டதையடுத்து, இந்தத் தீர்மானத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# ஜனாதிபதியின் பரிந்துரையில் பொலிஸ்மா அதிபரை அரசியலமைப்பு பேரவையே நியமிக்க வேண்டும்



(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் , அரசியலமைப்பு பேரவையே நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தி தோல்வியடையவில்லை. இந்த திருத்தமானது மக்களுக்கு நலனை பெற்றுக் கொடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டதாகும்.

19 ஆவது திருத்தத்தில் காணப்படும் குறைபாட்டின் காரணமாகவே இதுவரையிலும் பொலிஸ்மா அதிபரொருவரை நியமிக்க முடியாமல் இருக்கின்றது என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை பொலிஸ் ஆணைக் குழு வழங்காது. அதனை அரசியலமைப்பு பேரவையே வழங்க வேண்டும்.

முன்னாள் பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்ததனால், தற்காலிகமாக ஒருவரை நியமிக்க வேண்டி ஏற்பட்டது.

அதனாலேயே பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி பொலிஸ்மா அதிபர் நியமனத்திற்காக ஒருவரை பெயரிட்டால், அவர் தொடர்பில் அரசியலமைப்பு பேரவை ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்கும் என அவர் தெரிவித்தார். (ஜ-2)

## கப்பல் தொடர்பில் ஆராய விசேட நிபுணர் குழுவருகை

(கொழும்பு)

தீ விபத்திற்குள்ளான நியூடயமன் கப்பல் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக சிங்கப்பூரிலிருந்து டக் இயந்திரம் மூலம் விசேட நிபுணர் குழுவொன்று நேற்று வியாழக்கிழமை நாட்டை வந்தடைந்ததுள்ளதாக கடற்படை ஊடகப்பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், சிங்கப்பூரிலுள்ள சர்வதேச நிறுவனமான தனியார் நிறுவனத்தின் மீட்புப் பிரிவின் விசேட நிபுணர்களான இந்த குழுவினர் விபத்துக்குள்ளான கப்பலுக்குச் சென்று ஆராய்வர். நியூடயமன் கப்பல் தற்போது கரையிலிருந்து 50 கடல் மைல் தூரத்திற்கு ஆழ்கடல் நோக்கி நகர்த்தப்பட்டுள்ளது.

கப்பலுக்கு பின்னாலுள்ள கடற்பரப்பில் எண்ணெய் படர்ந்துள்ளதை விமானப் படையினர் அவதானித்ததையடுத்து கடலில் படர்ந்துள்ள எண்ணெய் காரணமாக சமுத்திர சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக இன்று முதல் இந்திய கரையோர பாதுகாப்பு படைக்கு சொந்தமான ட்ரோனியர் ரக விமானம் இரசாயனம் விசிறும் செயற்பாட்டில்ஈடுபட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## காற்றின் வேகம் அதிகரிக்கும் மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

புத்தளம் முதல் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலான கடற்பிராந்தியங்களில் காற்று மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்பதால், விழிப்புடன் செயற்படுமாறு மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, புத்தளம்முதல் கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்பிராந்தியங்களில் கடல் அலை 2.5 மீற்றர் முதல் 3 மீற்றர் வரை உயர்வடையக் கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.(2-7)





**ஜிம்மி**




அவள் பாதம் பட்ட இடமெல்லாம் முத்தமிட்டேன்
ஆனால் அவள் என் அம்மாவிடம் சொன்னாள்...
"ஆன்டி உங்க பையன் மண்ணு திங்குறான் என்று!"

**கண்மணி**



எல்லா பெண்களையும் விசிலடித்து திரும்பி பார்க்க வைத்தாலும் செருப்படி வாங்காத ஒரே ஜீவன் குக்கர் தான்..!

**அருண்**




**மீரா**

காதலி பேர பச்சை குத்துவது ஒன்றும்
பெரிய விடயம் இல்லை...
ஆனா! அதே பேரோட பொண்டாட்டி
கிடைக்கிறதுதான் கஷ்டம்..?



**சூரியா**



ஆசிரியர்: கடல் அரிப்பு ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
மாணவர்: சொறிஞ்சு விடனும் டீச்சர்...

**அனு**

"ஒவ்வொரு திருமண வீட்டிலும் இந்த பெருசுங்க தொல்லை... எல்லாரும் என் கிட்ட வந்து அடுத்தது உனக்குத்தானே என்று கன்னத்தை கிள்ளி கேட்டு நோகடிக்கிறார்கள்...
இனிமேல் ஒவ்வொரு இழவு வீட்டிற்கு செல்லும் பொழுதும் அங்கே இருக்கும் பெருசுங்க கன்னத்தை கிள்ளிவிட்டு அடுத்து உனக்கு தானே என்று கேட்டால் தான் அடங்குவாங்க போல..."

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மஞ்சள் தட்டுப்பாடு நிவர்த்தியாகும்

(கொழும்பு)

**எதிர்வரும் ஜனவரி மாதம் மஞ்சள் அறுவடை இடம்பெற்றதன் பின்னர் மஞ்சளுக்கான தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படும் என விவசாய ஏற்றுமதித் திணைக்களம் அறிவித்துள்ளது.**



சந்தையில் தற்போது மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு எதிர்வரும் ஜனவரி மாதம் நிவர்த்தி செய்யப்படும் என விவசாய ஏற்றுமதித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனை விவசாய ஏற்றுமதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பி.ஹீன்கேந்த தெரிவித்துள்ளார்.

மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் சந்தையில் அதன் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது.

இதேவேளை மஞ்சளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை தடைசெய்யுமாறும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்குமாறும் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆன்மீகம்



## பொன்னான நேரம் மண் ஆகலாமா

(நேற்றைய தொடர்ச்சி)

அவரின் அன்பான உதவிக்கும், கட்டளைக்கும் பணிந்தான் ஊழியன். தனக்கும், குடும்பத்திற்கும் தேவையானவற்றை எல்லாம் சில நாட்களில் வாங்கிக் கொண்டு விட்டான். பணம் தான் தினசரி வருகிறதே! எனவே நண்பர்களுக்கும், ஏழைகளுக்கும் வாரி வழங்கினான். 86,400 ரூபாயில் ஒரு ரூபாய்கூட மிச்சம் வைக்க முடியாதே! எனவே பெற்ற பணத்தை அன்றன்றே பல அறக்கட்டளைக்கும், ஆலயத்திற்கும் தந்தான்.

யார் அந்த கோடீஸ்வர முதலாளி? அவரிடம் வேலை செய்த அந்த அதிர்ஷ்டத் தொழிலாளி யார்? என்று அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா? 'ஆண்டவன் எனக்கொரு முதலாளி! அவனுக்கு நான் ஒரு தொழிலாளி!' என்று நாம் அனைவருமே ஆனந்தமாகப் பாடலாம்! ஆம்! ஆண்டவன் என்றும் முதலாளி, நம் அனைவருக்குமே தினசரி 86,400 பொன்னான விநாடிகளை வழங்குகிறார். நமக்கும், ஊருக்கும், நாட்டிற்குமாக அந்த சேமித்து வைக்க முடியாத செல்வத்தை நல்ல முறையில் செலவழிப்பது நம் கையில்தான் இருக்கிறது. பேரரசர் அக்பர் தன் பிரியத்துக்கு உகந்த பீர்பாலிடம், 'ஐந்து முட்டாள்களைப் பார்க்கவேண்டும் என்று என் மனதிற்குள் ஒரு ஆசை எழுகிறது. நீ சென்று தேடி அழைத்து வா' என்றார்.

ஐந்தாறு நாட்கள் சுற்றினார். மூன்று மூடர்களைப் பார்த்து அழைத்து வந்தார் பீர்பால். அரசர் 'இந்த மூவரும் எப்படி முட்டாள்கள் என்று எனக்குச் சொல்லுங்கள் பீர்பால்' என்றார். இதில் ஒருவன் குதிரையில் பயணம் செய்து கொண்டிருந்தான். அப்போது தன் தலைமேல் ஒரு மூட்டையைச் சுமந்தபடி காட்சி அளித்தான். 'சுமையைக் குதிரை மீதே வைக்கலாமே! ஏன் அப்படி சுமந்து கொண்டு கஷ்டப்படுகிறாய்? என்று கேட்டேன். அவன் சொன்னான், 'உங்களுக்கு அறிவிருக்கிறதா? என்னைச் சுமக்கவே குதிரை கஷ்டப்படுகிறது. இந்தச் சுமையையும் அதன்மீது வைத்தால் என்ன ஆகும்?' என்றான். விழுந்து விழுந்து சிரித்தார் அக்பர்.

இன்னொருவர் தன் பணத்தை ஒரு வீதியில் தவறவிட்டு விட்டு வேறொரு தெருவில் வந்து தேடிக் கொண்டிருந்தார். ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்டேன். 'பணத்தை அங்கு தேட முடியவில்லை. ஒரே இருட்டாக இருந்தது. இந்த வீதியில் தான் விளக்குகள் எரிகின்றன. வெளிச்சம் இருக்கும் இடத்தில் தானே தேட முடியும்' என்றான். 'இப்படியும் ஒரு அறிவிலியா? மூன்றாமவன் என்ன செய்தான் சொல்?' மூன்றாம் முட்டாள் பெரிதாகக் குரல் எழுப்பிவிட்டு அந்த இடத்திலிருந்து ஓடினான். 'என்ன செய்கிறாய்?' என்றேன். எவ்வளவு தூரத்திற்கு என் குரல் கேட்கும் என்று அறிந்து கொள்ள ஓடினேன். தடுத்து விட்டீர்களே?' என்றான். 'இப்படியும் முட்டாள்கள் இருக்கின்றனரே' என்ற பேரரசர் பீர்பால் ஐவருக்குப் பதில் மூவர் தானே வந்துள்ளனர். இன்னும் இருவர் எங்கே? என்றார்.

பீர்பால் தன்னையே சுட்டிக்காட்டி 'அமைச்சனாகிய நான் ஆற்ற வேண்டிய கடமைகள் எவ்வளவோ இருக்க, பயனற்ற இந்த வேலையில் ஐந்தாறு நாட்கள் கழித்துவிட்டேன். நான்காவது முட்டாள் நான்தான். ஐந்தாவது முட்டாள் யார் என்று சொல்ல எனக்கு தைரியம் இல்லை. காலம் பொன் போன்றது.

அற்புதமான நேரத்தை அநாவசியமாகச் செலவழித்துப் பின்னால் வருந்துவதால் பயன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை' என்றான். உரிய செயல்கள் புரிவதற்காகவே அரிய நேரம் நமக்கெல்லாம் பெரிய பரிசாக வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்வோம்!

# செய்தித்துளிகள்

## எண்ணெய்க்கசிவு தடுப்பு தொடர்பில் சட்டமா அதிபரின் அறிவிப்பு

(கொழும்பு)

கடற்பரப்பில் விபத்துக்குள்ளான 'எம்.டி. நியூ டயமன்ட்' எண்ணெய்க் கப்பலிலிருந்து எண்ணெய்க் கசிவு ஏற்படுவதைத் தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கையை உறுதி செய்யுமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா கடல் சுற்றுச் சூழல் மாசடைதல் அதிகார சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

எம்.டி. நியூ டயமன்ட் கப்பலுக்கு அருகே கடலில் இருந்து சேகரிக்கப்பட்ட எண்ணெய் மாதிரிகளை அரச ஆய்வாளர் துறைக்கு சமர்ப்பிக்குமாறும் கடல் சுற்றுச்சூழல் மாசடைதல் அதிகார சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரியும் சட்டத்தரணியுமான நிஷாரா ஜெயரத்ன தெரிவித்தார். (ஜ-4)

## பேருந்து முன்னுரிமை திட்டம் மீண்டும்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்மித்துள்ள நகரங்களில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில், பேருந்து முன்னுரிமை ஒழுங்கை சட்டத்தை (BUS LANE) மீள நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜீன் மாதம் முதல் கொழும்பு மற்றும் அதனை அண்மித்துள்ள நகரங்களில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில் பேருந்து முன்னுரிமை ஒழுங்கை சட்டம் பகுதி பகுதியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக இந்த சட்டத்தை அமுல்படுத்தும் நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## வெட்டுக்காயங்களுடன் சடலம்

(கொழும்பு)

வெட்டுக்காயங்களுக்குள்ளான ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் பத்தரமுல்லை பகுதியில் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 140 | 200 |
| தக்காளி | 150 | 150 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 |
| கோவா | 130 | 140 | 130 | 150 |
| கரட் | 80 | 160 | 160 | 200 |
| பூசணி | 120 | 100 | 120 | 120 |
| புடோல் | 70 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 130 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 200 | 280 | 240 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 180 | 200 | 140 | 150 |
| லீக்ஸ் | 80 | 200 | 90 | 80 |
| பீற்றூட் | 100 | 90 | 90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 340 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 300 | 200 |
| போஞ்சி | 280 | 320 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | - | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70-80 | 60-80 |
| இராசவள்ளி | - | -- | - | -- |
| வெங்காயப்பூ | 240 | 240 | - | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 80 | - | 80 |



# சிறுவர் அரங்கம்

## முனிவர் காட்டிய வழி

முன்னொரு காலத்தில் அந்தப்புரத்தை ஆண்டு வந்த அரசனுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு விக்ரம் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தான்.

விக்ரம் சிறு வயதிலிருந்தே யாரையும் மதிக்காமல் ஆணவத்துடன் வளர்ந்து வந்தான். அவனுக்கு எட்டு வயது ஆனதும் கல்வி மற்றும் அனைத்துக் கலைகளையும் கற்பதற்கு குருகுலத்திற்கு அனுப்பி வைத்தார் மன்னர்.

அங்கும் அவன் யார் பேச்சையும் கேட்காமல் குருவையும் மதிக்காமல் இருந்தான்.

அந்தக் குருவிடம் மிருகங்களை வசியம் செய்து, அவர் நினைத்தபடி ஆட்டுவிக்கும் சக்தி இருந்தது. அதை உபயோகித்து அவனுக்கு புத்தி புகட்டுவதற்கு ஒரு வழி கண்டு பிடித்தார்.

ஒருநாள் அனைவரும் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த போது இளவரசன் மட்டும் கரையில் அமர்ந்து ஆற்றுக்குள் கல் வீசி விளையாடிக் கொண்டிருந்தான்.

தூரத்தில் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்த சிறுத்தையை, தன் வசிய சக்தியால் ஈர்த்து இளவரசனை துரத்தும படி செய்தார் குரு.

சிறுத்தை இளவரசனை துரத்த ஆரம்பித்ததும், "ஐயோ"



என்று அலறியபடி அடர்ந்த காட்டிற்குள் ஓடினான்.

இளவரசன் வெகு தூரம் ஓடிக் களைத்து, ஒரு பெரிய மரத்தில் ஏறிக் கொண்டான். துரத்தி வந்த சிறுத்தை அவனைக் காணாமல் சென்று விட்டது.

பசி வயிற்றைக் கிள்ள, களைப்பில் தூங்கிப் போனான். தூங்கி எழுந்ததும் சூரியன் உச்சியிலிருந்தான். பசி, களைப்பு, பயம், கவலை இவற்றால் கால், கை நடுக்கமுற என்ன செய்வதென்று தெரியவில்லை.

சிறு வயதிலிருந்தே யாரையும் மதிக்காமல் தவறாக நடந்து கொண்டதை நினைத்து மிகவும் வருந்தினான்.

தன்னுடன் பயிலும் அனைத்து மாணவர்களும் குருவிடம் எவ்வளவு பயபக்தியுடன் நடந்து கொள்கிறார்கள்.

நான் மட்டும் ஏன் இப்படி இருக்கிறேன். அதனால்தான் இத்துன்பம் நேர்ந்தது என்று நினைத்து வருந்தினான். உடனே குருவை மனதில் நினைத்து குருகுலத்தை சென்றடைய வழிகாட்டும்படி மானசீகமாக குருவிடம் வேண்டிக் கொண்டான்.

அடுத்த நொடி யானையின் பிளிறல்சத்தம்கேட்டது. யானையைப் பார்த்த இளவரசன் யானைகள் தண்ணீர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும் திறன் பெற்றவை என்று கேள்விப்பட்டிருக்கிறான்.

யானை தண்ணீருக்காக செல்வதை அறிந்து, அதன் பின்னால் இளவரசன் நடக்க ஆரம்பித்தான்.

வெகு நேரத்திற்கு பின் யானை ஒரு ஆற்றங்கரையை அடைந்தது. அதன்பின் மகிழ்ச்சியடைந்த இளவரசன் தன் குருவிடம் சென்று அவர் காலடியில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

நாடாள வேண்டிய மன்னன் தவறான வழியில் செல்வதை தடுக்க, இந்த நாடகம் நடத்த வேண்டியிருந்ததை நினைத்தகுரு, அவனுக்கு கற்பிக்க வேண்டிய அனைத்து கலைகளையும் கற்றுக் கொடுத்து ஒரு நல்ல நாளில் மன்னரிடம் அனுப்பி வைத்தார்.

**நீதி: வயதில் மூத்தோரை மதித்து நடத்தல் வேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

**ஸர்ராஜராஜீஸ்வரமுடையார்க்கு அதாவது தஞ்சை கோயிலில் இருக்கும் ஈஸ்வரனுக்கு அவர் கொடுத்ததையும் அவருடைய அக்கா (குந்தவை) கொடுத்ததையும் அவருடைய மனைவியர் கொடுத்ததையும் மற்றும் யார் யார் என்னென்ன கொடுத்தார்கள் என்பதையும் கல்வெட்டில் பொறிக்க வேண்டும் என்று தன் பணியாளர்களுக்கு ஆணையிட்டுள்ளார்.**

**ராஜராஜன் தன் அக்கா மீது எத்தனை பாசம் வைத்திருக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ளலாம். அக்கன் குடுத்தனவும் நம் பெண்டுகள் குடுத்தனவும் என்று கூறும் பொழுது அக்காள்தான் முதன்மையாக இருக்கிறார்.**

**தம் குடும்பத்தினர் தானம் கொடுப்பது மட்டுமல்ல யார் என்ன கொடுத்தாலும் அதைக் கோயிலின் கல்வெட்டுக்களில் பொறிக்கப்படவேண்டும் என்கிறார் ராஜராஜன்.**




ராஜராஜனின் குளியல் தொட்டி

**இதில் இரண்டு விடயங்கள். ஒன்று எல்லோரையும் சமமாக நடத்துவது. அரசர் குலத்தவர் கொடுப்பதை மட்டும் கல்வெட்டில் பொறித்து விட்டு சாதாரண மக்கள் கொடுப்பதை உதாசீனம் செய்யவேண்டும் என்று அவர் நினைக்கவில்லை.**

**மேலும் கொடுக்கும் பொருளின் அளவுகளைப் பார்க்கத் தேவையில்லை. கொடுப்பவர்கள் எவ்வளவு கொடுக்கிறார்களோ அவற்றையெல்லாம் கல்லிலே வெட்டவேண்டும் என்று கூறுவது அவருடைய பெருந்தன்மையை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.**

**மற்றக் கோயில்களில் நிவந்தம் (தானம்) செய்பவர்களின் பெயர்கள் மட்டுமே இடம்பெற்றிருக்கும். ஆனால் ராஜராஜன் காலத்துக் கோயில்களில் தான் கோயில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்ட அத்தனை பேரின் பெயரையும் கல்வெட்டில் இடம் பெறச் செய்து சாதாரணர் என்று கருதப்பட்ட பலரையும் சரித்திரத்தில் இடம்பெறச் செய்தார் ராஜராஜன்.**

**வேதம் ஓதிய சட்டர்கள், பெருந்தச்சர்கள், ஆடல்மகளிர் அவர்களின் தலைவியராக விளங்கிய தலைக்கோல் மகளிர், ஆடல் மகளிருக்கு ஆடல் நட்டுவனார், பக்திப் பாடலிசைத்த பிடாரர்கள் பல்வேறு இசைக்கருவிகளில் வித்தர்களாக விளங்கிய வாத்திய மாராயர்கள், சண்டீசப் பெருமானின் பெயரில் கோயில் சொத்துக்களை வாங்கி விற்று அதைக் கணக்கெழுதிய கணக்கர்கள், அரிசி, பருப்பு, நெய்யிலிருந்து வாழைத்தார் போன்ற அத்தனை பொருட்களையும் பல்வேறு ஊர்களிலிருந்து கொண்டு வந்த விவசாயப் பெருமக்கள், நிவந்தங்கள் அளித்த வணிகர்கள், கோயிலுக்குக் காவல் காத்த காவல் வீரர்கள் என்று ஒரு பெரிய கலைஞர் கூட்டமும் இதர கோயில் நிர்வாகத்தினரும் மன்னருக்கு இணையாகக் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளதை வேறு எங்கு காணமுடியும்.**

**(தொடரும்)**

ஒரு மணியைப் போலத்தான் நல்ல செயல்களும் சொர்க்கத்தின் வாசலில் பெரிய ஓசையை எழுப்பும்.
– பீச்சர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாரியார் புகழ்ந்தேத்திய ஆன் கன்றும் கோன் கன்றும்

சிவனருட்செல்வர் என்ற நூலைத் தந்தவர் திருமுருக கிருபானந்தவாரியார்.

சமயச் சொற்பொழிவினால் உலகைக் கவர்ந்தவர் வாரியார்.

அவர் **ஆன் கன்றும் கோன் கன்றும்** என சொற்பொழிவாற்றினார்.

ஆன் கன்று என்பது பசுவின் கன்றைக் குறிக்கும். கோன் கன்று என்பது மன்னன் மகனை விளிக்கும்.

ஆக, மனுநீதி கண்ட சோழ மன்னனின் கதையையே வாரியார் ஆன் கன்றும் கோன் கன்றும் எனத் தலைப்பிட்டார்.

மனுநீதிச் சோழ மன்னனின் ஒரே மகன் வீதிவிடங்கன் தேர் செலுத்தும்போது, பசுவின் கன்றொன்று தேர்க்கால் இடைப்பட்டு இறந்து போனது.

தன் பிள்ளை இறந்த துயர் தாங்க முடியாத பசு, மன்னன் மனுநீதிச் சோழனின் அரண்மனை நோக்கிச் சென்று, அங்கிருக்கக் கூடிய ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் இழுத்து அடிக்கிறது.

ஆராய்ச்சி மணி ஒலிப்பதை செவிமடுத்து அதிர்ந்த மனுநீதி; தன் மந்திரியை அழைத்து காரணம் கேட்கிறான்.

நடந்த சம்பவத்தை மந்திரி சொல்ல அந்தோ! அந்தப் பசு படும் வேதனையை எங்ஙனம் போக்குவேன் எனத் துன்புறுகிறான்.

ஈற்றில் தன் கன்றை இழந்து தவிக்கும் பசுபோல தானும் துன்பம் அனுபவிப்பதே ஒரே வழி எனத் துணிந்து, தன் மகன் வீதிவிடங்கனை வீதியில் கிடத்தி தானே தேர் செலுத்தி, தேர்க்காலால் தன் ஒரே மகனைக் கொல்கிறான்.

இங்கு மனுநீதிச் சோழனின் நீதிக்கு நிகர் ஏதுமில்லை.

தவிர, ஆன் கன்று எனக் குறிப்பிட்ட வாரியார் மன்னன் மகனைக் கோன் கன்று என்றார்.

இஃது அஃறிணை, உயர்திணை பேதமையல்லவா? என்று யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் பசுவின் பால் தாய்ப்பாலுக்கு ஒப்பானது என்பதால், பசுவைத் தாயாகப் போற்றும் நம் மரபில் பசுவின் கன்றை உயர்த்தும் பொருட்டு மன்னனின் மகனைக் கோன் கன்று என்றார் வாரியார்.

ஆக, பசுவைத் தாயாகப் போற்றுகின்ற நம் உயர் பண்பாட்டில் பசு வதை என்பதற்கு இம்மியும் இடமிருத்தலாகாது.

எனவே மாடு வெட்டுவதற்கு, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் கொண்டு வரப்படுகின்ற தடையை நாம் அனைவரும் ஆதரிக்க வேண்டும்.

பசுவதையைத் தடுப்பதன் மூலம் **அம்மா** என்று கதறுகின்ற தாய்மை பாதுகாக்கப்படும். பசுவதைக்கு எதிராக நம் முன்னோர்கள் எடுத்து முயற்சிகள் காலம் தாழ்த்தியேனும் வெற்றி பெறும்.

ஆகவே, பசுவதையைத் தடுப்பதற்கு வழி வருகின்றபோது அதனை ஆதரிப்பது நம் அனைவரதும் தலையாக கடமையாகும்.

# போதைப்பொருள் கடத்தலில் இராணுவத்தினர் ஈடுபட்டால் தண்டனை வழங்கப்படும்

## இராணுவத்தளபதி எச்சரிக்கை

(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்தலில் இராணுவம் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

திருகோணமலையில் அமைந்துள்ள இராணுவத்தின் 22ஆவது படைப் பிரிவின் தலைமைக் காரியாலயத்திற்கு இராணுவத் தளபதி விஜயம் செய்து இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப் பொருள் பாவனை மற்றும் அதனை சட்டவிரோதமான முறையில் கடத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுவதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அவ்வாறான குற்றச்செயலில் ஈடுபடுபவர்கள் உடனடியாகவே கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# மாகாணத் தேர்தல் குறித்து அரசாங்கம் மௌனித்துள்ளது

## காவிந்த ஜயவர்த்தன சாடல்

(கொழும்பு)

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். மாகாண சபைகள் ஏற்கனவே முழு அளவில் செயலிழந்து போயுள்ள நிலையில் மாகாணங்களுக்கான தேர்தல் குறித்து அரசாங்கம் தொடர்ந்தும் மௌனித்திருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை சூழல் மாசடைவுகள் மற்றும் நாட்டின் உரிமைகள் அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில் அரசாங்கம் எவ்வாறான தீர்மானத்தை எடுக்கின்றது என்பது தொடர்பில் மக்கள் கவனம் செலுத்தி வருவதாகவும் எச்சரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்களை காரணம் காட்டியே அரசாங்கம் தேர்தலை வெற்றி பெற்றுள்ளது.

தற்போது ஜனாதிபதி ஆணைக் குழுவிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் இந்த தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாதிகளுக்கு வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களை பெற்றுக் கொடுத்தவர்களையும் விசாரணைக்குட்படுத்த வேண்டும்.

கடந்த அரசாங்கத்திலே இந்த தாக்குதல் இடம்பெற்றது என்று குற்றம் சுமத்தி வருவதனால் எந்த பயனும் இல்லை.

தற்போதைய அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் கருத்து தெரிவித்து வரும் அரசாங்கம் அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வது அவசியமாகும்.

நாட்டில் இன்று பாரிய சூழல்மாசடைவுகள் இடம்பெற்று வருகின்றன. மணல் மற்றும் மண் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை என்று கூறியதனால் கரையோரப் பகுதிகள் சேதமடைந்துள்ளன. சிங்கராஜாவனத்தில் பாதை அமைப்பதற்காக காடு அழிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், மாகாண சபைகலைக்கப்பட்டுள்ள போதிலும் தேர்தலை நடத்துவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

ஆளும் தரப்பினர் இரு குழுக்களாக பிரிந்து மாகாணசபை முறைமை தேவை என்று சிலரும், தேவையில்லை என்று சிலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு என்ன நடக்கப் போகின்றது என்பதனையும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாடு என்ன என்பதையும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**செய்யாதன செய்வதும் தீக்குறளை சென்று ஓதுவதும் எப்போதுமே நீக்க வேண்டியவைகளாகும். இவைகளை விரத காலங்களில் செய்வது மிகுந்த பாவத்தைத் தரும். இவைகளை விலக்க இயலாதவர்கள் விரத காலத்திலாவது விலக்கியிருக்க வேண்டும் என்பது கருத்தாகும். (தொடரும்)**

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மல்லாகம் சந்தியிலிருந்து அளவெட்டிவரை, மல்லாகம் நீதிமன்றக் கட்டடத்தொகுதி, மாலுசந்தி, அல்வாய், நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி, காந்தியூர், மந்திகை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சுப்பர்மடம் மரின்வெல்த் ஐஸ் தொழிற்சாலை, ஸ்ரீலங்கா ரெலிகொம் கரவெட்டி, வேம்பிராய், கனகம்புளியடி, சரசாலை, கல்வயல், மட்டுவில், புத்தூர்வீதி(மட்டுவில்) ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** முத்தையன் கட்டு கனகரட்ணபுரம், பனிக்கன்குளம், புதிய கொலனி, மாங்குளம், மாங்குளம் நீதிமன்றம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ஜோசப் முகாம், மூன்றுமுறிப்பு கிராமம், **SFHQ Vanni,** விமானப் படை முகாம், விமானப் படை முகாம் றேடார் நித்தியநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விநாயகருக்கு முன் தலையில் குட்டிக்கொள்வது ஏன்?

❖ அகத்தியர் காகத்தின் மீது சீறிப்பாய்ந்தார். அது சிறுவனாகி நின்றது. அச்சிறுவனை இரு கரங்களாலும் குட்டும் பொருட்டுக் குறுமுனி ஓடினார். பிள்ளையார் அவருக்கு அகப்படாமல் அங்கும் இங்குமாக ஓடினார்.

❖ அகத்தியர் அச்சிறுவனை அணுகிக் குட்டுவதற்கு இரு கரங்களையும் ஓங்கினார். ஐங்கரங்களுடன் விநாயகர் காட்சி தந்தருளினார்.

❖ அகத்தியர் திகைத்து போனார். விநாயகப் பெருமானே உம்மைக் குட்டுவதற்கா கையை ஓங்கினேனோ என்று தன் தலையிலேயே குட்டிக் கொண்டார்.

விநாயகர் அவருடைய கரங்களைப் பற்றி "இன்று முதல் என் முன் பயபக்தியுடன் தலையில் குட்டிக் கொண்டோர் கூரிய மதியும் சீரிய நிதியும் பெறுவார்கள்" என்று அருளினார். இதனால் விநாயகர் முன் பக்தர்கள் தலையில் குட்டிக் கொள்ளும் மரபு உண்டாயிற்று.

❖ விநாயகர் முன் தோப்புக் கரணம் இடுவதனால் அறிவு வளர்ச்சியும், உடல் நலமும் உண்டாகும்.



ஜேர்மனியில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த யுப்புன் எனும் வீரர்

# ஜேர்மனியில் சாதனை படைத்த இலங்கை வீரருக்கு நாமல் வாழ்த்து

10.16 செக்கன்களில் கடந்து, இலங்கை வீரர் யுப்புன் அபே கோன் தேசிய மற்றும் தெற்காசிய சாதனைகளை முறியடித்துள்ளார்.

இந்நிலையிலேயே அவருக்கு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

"ஜேர்மனியில் நடைபெற்ற தடகள போட்டியில் யுப்புன் அபேகோன், ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 10.16 விநாடிகளில் நிறைவுசெய்து இலங்கை மற்றும் தெற்காசிய மட்டத்தில் சாதனை படைத்தமை குறித்து செய்தி அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இந்த சாதனை இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அனைவரையும் பெருமையடையச் செய்துள்ளது. அவருக்கு வாழ்த்துக்கள்" என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (4-7)

# தாச்சி விளையாட்டுக்கான நடுவர் பயிற்சி வகுப்பு

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்படும் நடுவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆகிய தினங்களில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் பங்கு பற்ற விரும்பும் பயிற்சியாளர்கள் இனுவில் சங்கக்காரியாலய மண்டபத்திற்கு மேற்குறிப்பிட்ட நேரத்தில் சமுக மளிக்குமாறு யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்க செயலாளர் வை.ஆனந்தஜெஸ்கரன் அறிவித்துள்ளார். (4-5)

# 100 ஆவது சர்வதேச கோல்

## றொனால்டோ சாதனை

சுவீடனுக்கு எதிரான போட்டியில் முதலாவது கோலை அடித்த போது றொனால்டோ ஒட்டுமொத்த சர்வதேச கோல் எண்ணிக்கை 100-ஐ தொட்டு சாதனை படைத்துள்ளார்.

ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு சார்பில் நேஷன்ஸ் லீக் சர்வதேச கால்பந்து போட்டி பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் குழு 3இல் இடம் பெற்றுள்ள நடப்பு சம்பியன் போர்த்துக்கல் அணி சோல்னா நகரில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் உள்ளூர் அணியான சுவீடனை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. இரு கோல்களையும் போர்த்துக்கல் கேப்டன் கிறிஸ்டியானா றொனால்டோ (45-வது மற்றும் 72 வது நிமிடம்) அடித்தார் "பிரிகிக்" வாய்ப்பில்முதலாவது கோலை அடித்தபோது அவரது ஒட்டுமொத்த சர்வதேச கோல் எண்ணிக்கை 100-ஐ (165 ஆட்டம்) தொட்டது. (2)

# பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டி
# பருத்தித்துறை பிரதேச செயலக அணி சாதனை

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களிற்கான பளுதூக்கல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் சம்பியன் வென்று சாதனையைப் படைத்துள்ளனர்.

யாழ்.மாவட்டபிரதேசசெயலகங்களுக்கு இடையிலான ஆண்களிற்கான பளுதூக்கல் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா உடற்பயிற்சி மைதானத்தில் நடைபெற்றது.



இதில் ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் 5 தங்கப்பதக்கங்கள், 4 வெள்ளிப்பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 12 பதக்கங்களை கைப்பற்றிச்சம்பியன் பட்டத்தை கைப்பற்றியதுடன் வரலாற்றுச் சாதனையும் படைத்துள்ளனர். யாழ்.பிரதேச செயலக அணிஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் உட்பட மூன்று பதக்கங்களை கைப்பற்றி இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது (4-60)

# நொதேன் பிறீமியர் லீக் - 2K20 கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- சாவா ஸ்பாட்டன்ஸ் எதிர் சங்கானை றொப் 11
- சாவா ஸ்பாட்டன்ஸ் - 74/9
- சங்கானை றொப் 11- 64/8
- சாவா ஸ்பாட்டன்ஸ் 10 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - கபிசாந் 31 விக்கெட்டுக்கள்.



- வல்வை றைனோஸ் எதிர் சாவா ஸ்பாட்டன்ஸ்
- வல்வை றைனோஸ் - 57/10
- சாவா ஸ்பாட்டன்ஸ் - 59/6
- சாவா ஸ்பாட்டன்ஸ் 4 விக்கெட்டுகளால் வெற்றி
- ஆட்ட நாயகன் - அருண் பிரியன் 14 ஓட்டங்கள் ஆட்டமிழக்காது.



- வல்வை றைனோஸ் எதிர் ஊரெழு றோயல்ஸ்
- ஊரெழு றோயல்ஸ் - 90/4
- வல்வை றைனோஸ்- 87/6
- ஊரெழு றோயல்ஸ் 3 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சயந்தன் 40 ஓட்டங்கள்.

## கஞ்சாவுடன்...

வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-3,8,18)

## ஆண், பெண்...

உள்ள பற்றைக்காட்டில் ஒரே கயிற்றில் தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவரதும் பெண் ஒருவரதும் சடலங்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 04ஆம் திகதி முதல் காணாமல் போன நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் தேடப்பட்டு வந்த பரந்தன் பகுதியில் வசிப்பவரும் யாழ்ப்பாணம் மின்சார சபையில் கடமையாற்றி வந்த சுசிதரன் (வயது - 28) மற்றும் கிளிநொச்சி இரத்தினபுரத்தில் வசித்து வந்த நிலையில் தற்போது பட்டதாரி நியமனம் கிடைக்கப்பட்டு கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பணியாற்றி வந்த தனுசியா (வயது - 27) ஆகிய இருவரினதும் சடலங்களே மீட்கப்பட்டுள்ளது.

சடலங்களை மீட்ட கிளிநொச்சி பொலிஸார் பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் தற்கொலை செய்தனரா? அல்லது வேறு ஏதாவது சதி நடவடிக்கைகளால் உயிரிழந்தனரா? என விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த இருவரும் காதலித்து வந்ததாகவும் இவர்களது காதலுக்கு பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததாக பொலிஸார் நடத்திய ஆரம்ப விசாரணையில் அவர்களது நண்பர்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

(ம-3,15,100,312,350)

## 43 கிலோ...

பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வத்திராயான் கடற்பரப்பில் கைப்பற்றினர்.

கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய ஒர் இயந் திரப்படகு, ஓர் மோட்டார் சைக்கிள் மற்றும் இரண்டு சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக பளைப் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-3,316)

## நெதர்லாந்து...

யில் இலங்கைக் கடற்பரப்பில் தீ விபத்துக்கு இலக்கான நியூ டயமன்ட் கப்பலில் கடமையாற்றிய நெதர்லாந்து நிபுணர்கள் தொடர்பில் பிரதமர் மகிந்த, நெதர்லாந்து தூதுவருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளார்.

கடல்சார் நிபுணர்களுக்கு இடையில் பயிற்சிகளை நடத்துவதன் முக்கியத்துவம் குறித்து பிரதமர் மகிந்த இந்த சந்திப்பின் போது வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## தமிழர்களின்...

வழக்கில், வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் மூலம் குருந்தூர்மலைப் பகுதியில் கட்டடங்கள் எவையும் இரு தரப்பினராலும் அமைக்க முடியாதென உத்தரவிடப்பட்டுள்ளது.

இருப்பினும் அண்மை நாட்களாக குருந்தூர்மலைப் பகுதியில் கட்டுமாண வேலை ஒன்றினை முன்னெடுப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் முனைப்புக் காட்டி வந்திருந்தது.

இதை அறிந்த கோவில் நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றினை நாடியதுடன், நகர்த்தல் பத்திரம் (மோசன்) தாக்கல் செய்து, முன்னைய வழக்கின் மூலம், தற்போது மேற்கொள்ளவுள்ள கட்டுமாணம் தொடர்பில் விசாரணை செய்யுமாறு மன்றினை கோரியிருந்தனர்.

அதன் அடிப்படையில் இந்த வழக்கினை ஆராய்ந்த நீதிமன்று தொல்பொருள் திணைக்கள அதிகாரிக்கு அழைப்பாணை உத்தரவினைப் பிறப்பித்ததுடன், நேற்றைய நாளுக்கு வழக்கு விசாரணைக்கான திகதியிடப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்று கோவில் நிர்வாகத்தினர், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், தொல்பொருள் திணைக்களத்தினர், பொலிஸார் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்த நிலையில் இவ் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

குறிப்பாக வழக்கு விசாரணையின் போது, காவலரண் அமைப்பதற்கான கட்டுமாணங்களே தாம் மேற்கொள்ளவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தினரால் தெரிவிக்கப்பட்டதுடன், அவ்வாறு குருந் தூர் மலைப் பகுதியில் காவலரண் அமைப் பதற்கு மாவட்டச் செயலகம், மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என பன தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கிய அனுமதிப்பத்திரங்களை அவர்கள் மன்றிற்கு சமர்ப்பித்தனர். (ம-3,281)

## மேலும் திருத்தங்...

பில, 20ஆம் திருத்தம் வர்த்தமானியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின் வரைவை பாராளுமன்றத்தில் நீதி அமைச்சர் முன்வைப்பார்.

20ஆவது திருத்தத்தின் வரைபு செப்ரெம்பர் 03 அன்று நீதி அமைச்சினால் வர்த்தமானியிடப்பட்டது.

எதிர்க்கட்சி, நிபுணர்கள் மற்றும் பொது மக்கள் உட்பட பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துக்களைப் பெற இரண்டு வாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என கம்மன்பில தெரிவித்தார்.

நீதி அமைச்சரால் வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும், முதல் வாசிப்பு நடைபெறும். இதைத் தொடர்ந்து 20ஆவது திருத்தத்தின் வரைபை பரிசீலித்து ஆய்வு செய்ய உயர் நீதிமன்றத்திற்கு இன்னும் ஒரு வாரம் ஒதுக்கப்படும். எந்தப் பகுதிகளை திருத்த வேண்டும், பொது வாக்கெடுப்பு தேவையா என்பதை உயர் நீதிமன்றம் பின்னர் தெரிவிக்கும் என்று அவர் விளக்கினார். (ம-3)

## ஜனநாயகத்தை...

கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மரண தண்டனை கைதி பிரேமலால் ஜயசேகரவை பாராளுமன்றத்திற்கு அழைத்தமையானது ஒழுக்கம் குறித்து கேள்வியைத் தோற்றுவிக்கின்றது.

அதற்கு சட்டத்தன்மை காணப்படுகிறதா? என்பது மற்றொரு விடயமாகும். மேலோட்டமாக எதிர்க்கட்சி எதிர்ப்பினை வெளியிடுவதால் பயனில்லை. எனவே பிரேமலால் விடயத்தில் சட்டபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு பாராளுமன்ற ஒழுக்கவிதிகள் குறித்து சபாநாயகருக்கு வலியுறுத்தப்பட வேண்டும்.

மேலும் ஆளுங்கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்றது என்பதற்காக 19ஆவது திருத்தத்தின் ஜனநாயக தன்மையை அழிப்பதற்கோ குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டவர்களை பாராளுமன்றத்திற்கு அழைப்பதோ சரியா என்ற கேள்வி சமூகத்தில் தற்போது ஏற்பட ஆரம்பித்துள்ளது.

இதிலிருந்து தப்பிச் செல்ல அரசாங்கத்துக்கு முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## விபத்...

குமார் (வயது-22) என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா சைவப் பிரகாச மகளிர் வித்தியாலயத்துக்கு கூரை வேலை செய்வதற்காக ஐந்து பேர் கடந்த மாதம் மட்டக்களப்பிலிருந்து வந்துள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி இரவு 2 ஆவது மாடியில் கூரை வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளனர்.

மூன்று பேர் ஒரு கம்பியில் ஏறி நின்று வேலை செய்தபோது திடீரென கம்பி வளைந்ததில் 3 பேரும் கீழே விழுந்துள்ளனர்.

காயமடைந்த மூன்று பேரில் ஒருவர் கடந்த 6ஆம் திகதி சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். மற்றைய நபர் நேற்று சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார்.

இந்த மரணவிசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். (ம-3,9)

20ஐ கொண்டுவர

# அவசரப்பட தேவையில்லை

### கரு தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பில் 20ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்கு அவசரப்பட தேவையில்லை என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில் அதனை கொண்டு வருவதற்கு ஏன் அவசரப்பட வேண்டும் என தாம் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

புறக்கோட்டையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1612 திகதி 10.09.2020
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 08 10 59 66

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 10-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2536
L 19 20 27 59

மஹஜன சம்பத
திகதி 2020/09/10
சீட்டிழுப்பு இலக்கம் 4241
C 6 4 8 6 5 9

மெகா பவர்
திகதி 10/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0608
S 22 11 16 23 40

04 06 19 72 N

16 24 56 58 G

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 365
திகதி 10.09.2020
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 12 15 24
விதி எண் 4
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,498,060
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1211
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 10.09.2020
தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
S 13 20 48 61
55,313,372.40
SUPER 500 1 7 7 9

02 16 27 32

**வணிகக்கல்வி கருத்தரங்கு**

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்

ஆரம்பம் நாளை 12.09.2020 - 2.00 p.m

A/L 2020 N.S. கபில்

DCM$_N$ யாழ். நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகில்.

Tel : 077 011 9434 நிர்வாகம் (3855)

**வரலாறு கருத்தரங்கு**

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்

ஆரம்பம் நாளை 12.09.2020 - 12.30 p.m 13.09.2020 - 4.30 p.m

A/L 2020 S.Y.R இரவீந்திரன் S.S.Y பிரதீபன்

DCM$_N$ யாழ். நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகில். (3855)

**வேலை வாய்ப்பு**

கொழும்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வெளிநாட்டுப் பட்டப்படிப்பை மேற்கொள்பவர்களுக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கு, விசா தொடர்பான அனுபவமுள்ள ஆலோசனை வழங்குனர்கள் தேவை. (3850)

EXPONET OVERSEAS CONSULTANTS, 345, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 435 5114
071 415 0995

**வேலையாட்கள் தேவை**

எமது விருந்தினர் விடுதிக்குப் பின்வரும் வேலையாட்கள் தேவை.
- சமையல் ஆள்
- அறைகள் பராமரிப்பாளர்
- சுத்திகரிப்பாளர்

விருப்பமுடையவர்கள் நேரில் வரவும். (C-273)

மிலேனியம் விருந்தினர் விடுதி,
இல. 76/60, இராமநாதன் வீதி (கம்பஸ் றோட்),
கலட்டி, யாழ்ப்பாணம்.
021 222 5876, 077 601 6310, 077 243 1310

**விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி**

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

2020 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான....
மாபெரும் விசேட செயலமர்வு
8.30AM - 2.30PM

செப்டம்பர் 12,13,14 தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

செப்டம்பர் 19,20,21 ICT, கணிதம்(7) விவசாய விஞ்ஞானம் ஊடகக்கல்வி, புவியியல்

- இம்முறை COVID - 19 தாக்கத்தால் இருந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில்
- அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
- பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.
- புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
- சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளத் தரமிக்க பொருத்தமான

முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
- Open University Law அனுமதி.
- சட்டக் கல்லூரி அனுமதி.
- மத்திய வங்கி MA.
- புகையிரத நிலைய அதிபர்.
- MSO. பிரிவு I சனி 8.30 - 1.30 / பிரிவு II ஞாயிறு 8.30 - 1.30

AMC ACADAMY
BMC Lane, Clock Tower Road, Jaffna.
070 171 0061, 077 694 4543
(வெலிங்டன் சந்தி அருகில். ) (C-281)

AMC ACADAMY
BMC Lane, Clock Tower Road, Jaffna.
070 171 0061, 077 694 4543

Cambridge English Qualification
English For
- Young Learners (6 to 10 Years) A1, A2
- Teenagers & School Leavers A1, A2, B1,B2,C1
- Adults & Profession B1, B2, C1

(வெலிங்டன் சந்தி அருகில். ) (C-281)

**உதவி ஆசிரியை தேவை**

உதவி ஆசிரியையாக பணிபுரிவதற்கு பெண் பிள்ளை தேவை.

தகைமை : G.C.E. O/L
வேலை நேரம் : 7.30 - 12 மணி வரை (திங்கள் - வெள்ளி)

தொடர்புகளுக்கு
077 104 1923 (C-285)

**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் V2 TRAVELS

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243 v2vacancies@gmail.com (C-224)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK-1025/=Kg
பிரான்ஸ் / ஜேர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம், நெல்லியடி, புதுக்குடியிருப்பு, பருத்தித்துறை, கிளிநொச்சி, கொடிகாமம், சுன்னாகம், வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, மானிப்பாய்

0768226240 (C-112)

**Computer Courses**
- Java Programming
- C++ Programming
- Python Programming
- Arduino Programming
- Web Designing with PHP and MySql
- Computer Networking

AMC ACADAMY
BMC Lane, Clock Tower Road, Jaffna.
070 171 0061
077 694 4543
(வெலிங்டன் சந்தி அருகில் ). (C-282)


**நெல்லியடியில் வாகனம் விபத்து**

(கரணவாய்)

யாழ். நெல்லியடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது மினிபஸ் மோதி விபத்துக்குள்ளாகியிருக்கின்றது. சம்பவத்தில் எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

குறித்த விபத்து சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்த தனியார் போக்குவரத்து மினிபஸ் முடக்காட்டுச் சந்தியில் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட காருடன் மோதி விபத்திற்குள்ளானது.

நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03,60)

**கொரோனா நேற்று 8 பேர்**

(கொழும்பு)

இலங்கைக்குள் கொரோனா தொற்றாளிகளின் எண்ணிக்கை 3ஆயிரத்து 155ஆக உயர்ந்துள்ளது. நேற்று மாத்திரம் 8 பேர் தொற்றாளிகளாக அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐந்து பேர் மாலைதீவில் இருந்தும், ஒருவர் குவைத்தில் இருந்தும், ஒருவர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்தும், ஒருவர் சிங்கப்பூரில் இருந்தும் அழைத்து வரப்பட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 188பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். 70 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் கண்காணிக்கப் பட்டு வருகின்றனர்

நேற்று 9 பேர் குணமான நிலையில் தொற்றில் இருந்து குணமாகியுள்ளவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 955 என இலங் கையின் சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. (ம-03)


**DTPE CAMPUS**

2020 – செப்டெம்பர் மாதத்திற்கான பட்டப்படிப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

**B.A in English (Top -up)** கால அளவு :- 1 வருடம், நுழைவுத் தகைமை :- HND / Advanced Diploma அல்லது சம்பந்தப்பட்ட துறையில் 3 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**B.B.A - Bachelor of Business Administration** / **B.Sc in Tourism and Hospitality Management** / **B.Sc in IT**
கால அளவு :- 1 வருடம், நுழைவுத் தகைமை : HND / Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**B.Sc in Civil Engineering** கால அளவு :- 1 வருடம், நுழைவுத் தகைமை : HND /Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**M.B.A - Master of Business Administration** கால அளவு :- 18 மாதங்கள், நுழைவுத் தகைமை : Any Bachelor Degree அல்லது முகாமைத்துவத் துறையில் 10 வருட அனுபவம்.

முதலில் பதிவு செய்யும் 10 மாணவர்களுக்கு 10% கட்டண கழிவு வழங்கப்படும்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்ட கற்கைநெறிகள்.
- மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
- அரச பல்கலைக்கழக மற்றும் அரச உயர்கல்வி நிறுவன விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகிறது.

தொடர்புகளிற்கு (C-284)
No. 925, K.K.S Road, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
Level 4, No. 174 George R.De. Silva Mawatha, Colombo 01300
தொலைபேசி இல:- 021 468 0964, 077 028 8711, 077 975 4225

**English Trainer Training Diploma**
240 hrs (Teacher Training) 4 Months
- அடிப்படையிலிருந்து முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கும்

Reading, Writing, Listening, Speaking, Presentation, Teaching Practice

புதிய பிரிவுகள் - ஆரம்பம்
முன்பதிவினை மேற்கொண்டு கற்கைநெறியில் இணையவும்.
12.09.2020 - Weekends 9.00 a.m - 1.00 p.m
14.09.2020 - Weekdays 2.30 p.m - 5.30 p.m

ELAS இல.51, மாநகரசபை புதிய கட்டடத்தொகுதி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 076 223 5678, 076 697 3040 (3848)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**



| | | | |
|---|---|---|---|
| கனடா | - 650/= | ஜேர்மனி | - 1150/= |
| லண்டன் | - 1050/= | பிரான்ஸ் | - 1150/= |



அருள்
தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
அருள்
இ.போ.ச. பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.

தொ. இல:- 076 443 1576 (C-255)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.